# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 25 ★ 12.05.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## பெற்றால் தான் அன்னையா?

அன்னையர் தின சிறப்புக்கட்டுரை

தீபச்செல்வன்

## சனநாயக கடமைகளிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் இராஜரட்ணம் கிரிசாந்தன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி



## பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் மீது நேரடியாக பாய்கின்றது என்பதற்கு பல்கலைக்கழக மாணவர்களின் கைது முன்னுதாரணம்.

சனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி

## எமது உரிமைகள் மறுக்கப்படுவதற்கான பின்னணியை புரிந்து கொள்வதற்கு பூகோள அரசியல் பற்றிய தெளிவு அவசியம்.

கலாநிதி. ந. மாலதி இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி



## எமக்கு இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியது போட்டுடைத்தார் - ஹிஸ்புல்லா



# வவுனியாவில் பாக்கிஸ்தான் அகதிகளை தங்க வைப்பதன் உள்நோக்கம் என்ன? கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்ததன் மர்மம் என்ன?

## கேள்வி எழுப்புகிறது தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்

தமிழர் தாயகத்தின் முகவாயிலாக இருக்கும் வவுனியா மாவட்டத்தில் பாக்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் அகதிகளை தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏனைய எட்டு மாகாணங்களும் அந்த அகதிகளை நிராகரித்திருக்கும் நிலையில் வடக்கு மாகாணத்தினை அரசாங்கம் தெரிவு செய்ததன் பின்னணி என்ன? இதற்கு தமிழ் மக்களும், பிரதிநிதிகளும் அனுமதி வழங்கியுள்ளார்களா? என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடயம் குறித்த மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாக்கிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் 1670 பேர் நீர்கொழும்பு பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முஸ்லிம்களாக இருப்பதால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் குறித்த மக்களை இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கு மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தது. ஆனால் எந்தவொரு பெரும்பான்மை அரசியல் பிரதிநிதிகளும் அதற்கான இடமளிப்பினை வழங்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் எதிர்ப்புக்களை நேரடியாகவே வெளியிட்டுவிட்டனர்.

இவ்வாறான நிலையில்த்தான் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றும் சிங்கள, பௌத்த தேசியவாத நிகழ்ச்சி நிரலை செவ்வனே முன்னெடுத்து வரும் பெரும்பான்மை ஆட்சியாளர்களிடத்தில் மேற்படி அகதிகளையும் தாயகத்திலேயே குடியேற்றிவிடலாம் என்ற சிந்தனை தோற்றம் பெற்றுள்ளது. இதற்கான அனுமதியை தாயகத்தின் ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதியாக சிங்கள தலைமைகள் கருதிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடத்தில் கோரவும் நக்குண்டார் நாவிழந்தார் என்ற நிலையில் அதற்கு தலையசைத்தாகிவிட்டது.

அத்துடன் தாயக மக்களின் வலிகளை என்றுமே உணந்திராத போதும் வடக்கின் தமிழ் ஆளுநர் என்று மார்பு தட்டும் சுரேன் ராகவனும் பச்சைக்கொடி காட்டிவிட்டார். பௌத்த மாநாட்டை வவுனியாவில் நடத்திய பச்சைத்தமிழனான ஆளுநர் இதற்கு மறுப்பை தெரிவிப்பார் என்று கருதுவதும் தவறாகும். இப்படியான பின்னணியில்த்தான் வவுனியாவில் பூந்தோட்டத்தில் புனர்வாழ்வு முகாமாக செயற்பட்டுவரும் வடமாகாண கூட்டுறவு பயிற்சி நிலைய மண்டபத்தில் குறித்த அகதிகளை தங்க வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# எமக்கு இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியது போட்டுடைத்தார் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா

பிரேமதாசா சனாதிபதியாக இருந்த போது அன்றைய பாதுகாப்பு செயலாளரினால் எமது இளைஞர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த ஆயுதங்கள் சட்டபூர்வமானவை என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்

தற்போது அவர்மீது சுட்டப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து கருத்து வெளியிட்டபோது இந்த தகவலையும் அவர் போட்டுடைத்தார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது,

1990ஆம் ஆண்டு காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட போது நான் அந்த ஜனஸாக்களை அடக்குவதற்கு கூட நிற்கவில்லை. அன்றைய சனாதிபதி ஆர். பிரேமதாஸாவை சந்தித்தேன். அதன் போது சனாதிபதி என்னிடம் நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். எங்களுக்கு ஆயுதங்களை தாருங்கள் எங்களின் இளைஞர்களை தருகின்றோம். அவர்களுக்கு பயிற்சிகளை கொடுத்து எங்கள் மக்களை பாதுகாருங்கள் என்றேன்.

இதற்கு அமைய அன்றைய சனாதிபதி அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த ஜென்ரல் சியபால ஆட்டிகலவுக்கு அனுமதி வழங்கி உத்தியோகபூர்வமாக இராணுவத்தினரால் ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டு, எங்களின் இளைஞர்களுக்கு ஒருநாள், இரண்டு நாள் பயிற்சிகளை வழங்கி ஓட்டமாவடி காவத்தைமுனை



தொடக்கம் காத்தான்குடி வரை எங்களின் பிரதேசங்களை நாங்கள் பாதுகாத்தோம். அவை சட்டபூர்மற்ற ஆயுதங்களல்ல என்பதனை மிகத் தெளிவாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

சஹ்ரானோடு கைகுலுக்கிய ஒரு படத்தை வைத்துக் கொண்டுதான் எனக்கும், சஹ்ரானுக்கும் தொடர்பு இருப்பதாக என்னுடைய எதிரிகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வந்தபோது சகல வேட்பாளர்களையும் அவர் அழைத்து இருந்தார். வேட்பாளர் என்ற அடிப்படையில் நானும் கலந்து கொண்டேன். அங்கு முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்ட பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், பொறியிலாளர் சிப்லி பாறூக் ஆகியோர்களும் இருந்தார்கள் என்றார்.

# காத்தான்குடியில் சோதனை செய்யாது தடுப்பது யார்?

தற்கொலை குண்டுதாரிகளின் பிறப்பிடமாக கருதப்படும் காத்தான்குடி பகுதியில் பல்வேறு சோதனைகள் படையினர் மூலம் நடத்தப்பட்டது. இத்தகைய சோதனைகளின் போது, தற்கொலை குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் காசிமின் தங்குமிடங்கள், சகாக்கள், ஆயுதங்கள் என்பன கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் காத்தான்குடி பிரதேசத்தினை முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு முடியாது படையினரும், காவல் துறையினரும் திண்டாடி வருகின்றனர். குறிப்பாக சோதனை நடவடிக்கைகளில் காவல் துறையினரும் இணைந்தே செயற்பட்டு வருகின்ற நிலையில் காத்தான்குடி காவல் நிலையத்திலிருந்து போதுமான ஒத்துழைப்புக்கள் கிடைக்கவில்லை என்று படைத்தரப்பில் கூறப்படுகின்றது. குறிப்பாக காத்தான்குடி காவல் நிலையத்தில் பொறுப்பதிகாரி உடப்பட மூவரே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஏனையவர்கள் முஸ்லிம்களாக இருக்கின்றனர், ஆகவே சோதனை நடவடிக்கைகளுக்கான நகர்வுகளைச் வினைத்திறனாக செய்ய முடியாத நிலை இருப்பதாக காவல் நிலைய பொறுப்பதிகாரி தனக்கு நெருங்கிய தரப்பினரிடத்தில் கவலை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் படையினர் காத்தான்குடியை முழுமையாக சோதனைக்குட்படுத்த வேண்டும் என்று முயற்சிக்கின்ற போதெல்லாம் அரசியல் ரீதியான தலையீடுகளால் அதற்கான கட்டளைகள் கிடைக்காது போய்விடுவதாக அறிய முடிகின்றது. விசேடமாக ஹிஸ்புல்லாவின் காரியாலயத்தில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதிலிருந்து இந்த நிலைமைகள் அதிகரித்துள்ளதாக படைத்தரப்பு கவலை வெளியிட்டுள்ளது. இவ்வாறான நிலையில் காத்தான்குடியை முழுமையான சோதனைக்கு உட்படுத்த முடியாது தடுக்கும் நபர் யார்? என்ற கேள்வி பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேலெழுந்துள்ளது. காத்தான்குடி தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் பிறப்பிடம் என்பதோடு தனது கோட்டை என்றும் அவர் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் தற்கொலை தாக்குதலுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்கும் பாரிய வேறுபாடு - இலங்கை இராணுவத் தளபதி

விடுதலைப்புலிகள் அமைப்பினர் தனது தலைவருக்காகவும், அமைப்புக்காகவுமே தற்கொலைத் தாக்குதலில் உயிரைவிட்டனர். மாறாக, இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் தமது உயிர்களை விடுவது, தாம் தவறான முறையில் விளக்கம் பெற்றுக் கொண்டுள்ள அடிப்படையில் என இலங்கை இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

நேற்றிரவு சிங்கள தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார். தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்கு இவர்களின் பயிற்சியை விடவும், மனோநிலைதான் இங்கு முக்கியமானது. நாம் விடுதலைப் புலிகள் அமைப்புடன் நடாத்திய 30 வருட யுத்தத்தை விடவும் மாற்றமான ஒன்றாக இது உள்ளது. புலிகள் அமைப்பினர் தமது தலைவருக்காகவும், அமைப்புக்காகவுமே தற்கொலைத் தாக்குதலில் உயிரை விட்டனர். மாறாக, இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் தமது உயிர்களை விடுவது, தாம் தவறான முறையில் விளக்கம் பெற்றுக் கொண்டுள்ள சிந்தனை ரீதியிலான ஒரு கருத்துக்காகவாகும். இந்த சிந்தனை ரீதியிலான போராட்டத்துக்கு உடலியல் ரீதியிலான பலத்தை விடவும், மனரீதியிலான பலமே முக்கியமாகும். இத்தகையவர்களுக்கு பாரிய பயிற்சிகள் தேவைப்படுவதில்லை. நான் இவ்வாறு கூறுவதற்கான காரணம் இருக்கின்றது. நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தை பார்க்கும் போது, ஹோட்டல் ஒன்றில் வைத்து தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்ய முயற்சி செய்கின்றார். இருப்பினும், அது வெடிக்கவில்லை. மீண்டும் அவர் பள்ளிவாசலுக்கு சென்றுவிட்டு, தெஹிவளை விடுதிக்குள் செல்கின்றார். அங்கு இதனை வெடிக்கச் செய்யும் விதமாக தயார் செய்யும் போதே வெடித்திருக்கும் என ஊகிக்க முடியுமாக உள்ளது. விடுதியில் இதனை செயற்படுத்தக் கூடியதாக சரிசெய்யப்பட்டிருந்தால், அருகிலுள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் வெடிக்கச் செய்திருக்கலாம். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை.

இதிலிருந்து புரிந்து கொள்ள முடியுமான முக்கிய விடயம்தான், இந்த பயங்கரவாதி மனரீதியாக பித்துப் பிடித்தவராக மாறியுள்ளார் என்பதாகும். இந்த தாக்குதல்கள் இடம்பெற்ற வீடியோ காட்சிகளைப் பார்க்கும் போது இவர்கள் பாரிய பயிற்சிகளைப் பெற்றவர்களா? என்ற சந்தேகம் எழுகின்றது எனவும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

## தமிழர்கள் மீது திட்டமிட்ட அடக்குமுறையான ஆட்சிக்கு முண்டுகொடுக்கும் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் விசனம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களை மழுங்கடிக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது. இதனடிப்படையில்தான் தமிழ் மீது திட்டமிட்ட அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொதிநிலை கருத்துக்களை முன்வைத்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். யுத்தம் நிறைவுக்கு வந்து பத்தாண்டுகளாகின்றபோதும் வடக்கில் எந்தவொரு வன்முறைச் சம்பவங்களும் நிகழவில்லை. அத்துடன் தமிழ் மக்கள் 2009 இல் போர் நிறைவுக்கு வந்தபின்னர் தமிழ் மக்கள் தமது விடுதலையைக் கோரி சனநாயக ரீதியிலேயே போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர். தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி சர்வதேசத்தின் ஊடாக அழுத்தமளிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளனர்.

நடைபெற்ற விடயங்களுக்கு பொறுப்புக்கூறல் வேண்டும் என்பதில் உறுதியாக கோரி வந்துள்ளனர். நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்றால் சம அந்தஸ்துடன் தமது அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படுவதோடு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படாமையை உறுதி செய்யும் வகையில் தமது அங்கீகாரத்தினைப் பெற்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வந்துள்ளனர். முஸ்லிம்கள் உரிமைகளுக்காக இந்த நாட்டில் போராடவில்லை. அவ்வாறான சம்பவங்கள் ஏதும் இங்கு நிகழவும் இல்லை. அவ்வாறு இருக்கையில் இந்த சம்பவங்களை பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்குமுறைக்குள் உட்படுத்த முயல்வதானது பெரும்பான்மை தலைமைகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அங்கம் என்று தான் கூறவேண்டும். அரசாங்கமும் தென்னிலங்கை தலைவர்களும் குறுக்குப்போக்கில் செயற்பட்டு தமிழர்களின் நியாயமான அபிலாசைகளுக்கான கோரிக்கைகளை அழித்து விடலாம் என்று கருதக்கூடாது என்பதை தெளிவாக கூற விளைகின்றோம் என்றும் காட்டமாக உரைத்துள்ளார்.

ஆனால் இந்த நிலமைகள் தொடர்ந்தால் நாங்கள் அரசாங்கத்திற்கு முண்டு கொடுப்பதிலிருந்து விலகி விடுவோம் என்று எந்தவொரு சொற்பதத்தையும் பயன்படுத்தவில்லையே என்று தாயக உறவுகள் தமது மனக்குமுறல்களை எமக்கு தெரிவித்துள்ளனர்.

## முள்ளிவாய்க்கால் சடங்கல்ல நீதிக்கான செயற்பாடு

முள்ளிவாய்க்கால் வாரம் ஆரம்பமாகிவிட்டது. பத்தாண்டுகளுக்கு முன்னர் எமது இனம் குறுகிய ஒரு நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டு கொடூரமான ஆயுதங்கள் கொண்டு மிலேச்சத்தனமாக இனவழிப்பு செய்யப்பட்ட அந்த உச்ச நாட்களின் நினைவுகள் தேசத்தின் மீது பற்றுக் கொண்டோர் அனைவர் நினைவுகளையும் மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. அந்த நாட்களில் அந்த மண்ணில் நின்றவாறே அத்தனையையும் நேரடியாக அனுபவித்து இன்றும் சாட்சிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது உறவுகளும் எங்கள் மண்ணில் இவ்வாறான ஒரு பேரவலம் நடந்துவிடக் கூடாதென தமிழன் செறிவாக வாழ்ந்த அத்தனை நாட்டின் வீதிகளிலும் தொடர்ச்சியாக நின்று போராடிய எங்கள் மக்களும் அந்த நாட்களை மீள அசைபோட்டுப் பார்க்கின்றனர்.

பத்தாண்டுகள் கடந்து போய்விட்டன. இந்த அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அதற்கு மேலான இனவழிப்புக்குமான நீதி எங்கள் மக்களுக்கு கிடைக்கும் என்பதற்கான எந்தவிதமான நம்பிக்கைகளும் அறிகுறியும் எங்கும் தெரிந்த பாடாக இல்லை. எங்கள் மக்களுக்கான அரசியல் தலைவர்களும் இந்த மக்களுக்கான அரசியல் பணி செய்பவர்களும் அமைப்புக்களும் எங்கள் மக்கள் விடயத்திலும் எமது அரசியல் விடுதலையை வென்றெடுப்பதற்கான சரியான போராட்ட வழிமுறைகளை ஒழுங்குபடுத்துவதிலும் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளை விருப்பு வெறுப்புக்களை கடந்து இன்னமும் முழுமையாக ஒருங்கிணையவில்லை என்பது நீதிக்காக பெரும் மூச்சுடன் காத்திருக்கும் மக்களை மேலும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது

தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பிலிருந்து இலங்கை அரசை பாதுகாப்பதற்கு ஐ.நா மன்றம் கால அவகாசம் மூலம் மெல்ல மெல்ல நீதியை கொல்லும் அதே வேளை தமிழ் மக்களின் ஆணையை பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது பதவி நலன்களுக்காக அரசிற்கு ஆதரவாக செயற்படுவது முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அனுபவித்த மக்களையும் விரத்தியடைய செய்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களும் அதன் பின்னரான நிலைமைகளும் அவசரகால சட்ட மீளமுலாக்கமும் முள்ளிவாய்க்கால் மண்ணில் உணர்வெழுச்சியோடு பல்லாயிரக்கணக்கில் இடம் பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்த நினைவேந்தல் நிகழ்வை திட்டமிட்டபடி செய்வதற்கான தடங்கல்களை நிச்சயம் ஏற்படுத்தும். அதையும் தாண்டி தங்களால் முடிந்தவரை முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவேந்தும் முயற்சியை தாயக உறவுகள் அனைவரும் ஒன்றுபட்டு நிச்சயம் மேற்கொள்வார்கள். புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்கின்ற தேசப்பற்றுக் கொண்ட அத்தனை மக்களும் தாய் தமிழக உறவுகளும் முள்ளிவாய்க்கால் வாரத்தையும் முள்ளிவாய்க்காலின் இறுதி நாளான மே 18 நிகழ்வுகளையும் தங்களால் முடிந்தவரை கனதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நினைவேந்த வேண்டியது காலத்தின் கட்டாயமானதும் ஆகும்.

இருந்தாலும் இந்த நினைவேந்தலோடு மட்டும் நம் கடமை முடிந்து விட்டதாக இருந்து விடுவோமாக இருந்தால் இது ஒரு சடங்காக மட்டுமே இருந்து விட்டுப் போகும். முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கும் இன அழிப்புக்குமான நீதி எமது மக்களுக்கு கிடைப்பதற்காக நாங்கள் ஒருங்கிணைந்து திட்டமிட்டு ஆற்றுகின்ற செயற்பாடுகள் மட்டுமே அந்த மண்ணுக்கும் உயிர்நீத்த உத்தமர்களுக்கும் நாம் செய்கின்ற உண்மையான அஞ்சலியாகவும் நெஞ்சொலியாகவும் இருக்க முடியும். எங்கள் தாய்மண் இன்னமும் ஆக்கிரமிப்பாளர்களின் மிதிப்புக்கு கீழேயே கிடக்கின்றது. எங்களது மக்கள் தங்களது விருப்பத் தேர்வில்லாத ஆட்சி அதிகாரத்தின் கீழேயே இன்னும் வாழ்கின்றார்கள். எங்கள் மண்ணும் எங்களது மக்களும் சுதந்திரமான காற்றை சுவாசிக்கின்றவரை தேசத்தில் பற்றுறுதி உள்ளவர்கள் ஓய்ந்துவிட முடியாது. நாடகங்களையும் சடங்குகளையும் கடந்து எமது மக்களுக்கான நீதி தேடலில் ஒன்றுபடுவோம் செயற்படுவோம்.


மே - 18
முள்ளிவாய்க்கால்
10
?

# எமது உரிமைகள் மறுக்கப்படுவதற்கான பின்னணியை புரிந்து கொள்வதற்கு பூகோள அரசியல் பற்றிய தெளிவு அவசியம்.

கலாநிதி. ந. மாலதி

**அன்றைய வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் (North-East Secretariat on Human Rights NESoHR) முக்கிய உறுப்பினரும், தாயகத்தில் பெண்கள் முன்னேற்றச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரும், மனித உரிமை ஆர்வலரும், எழுத்தாளருமான கலாநிதி. ந.மாலதி அவர்கள் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு பேட்டி**

**கேள்வி- முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம் பெற்று பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட இன்றைய நிலையில் நீதி வழங்கப்படுவது, தமிழர்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்படுவது தொடர்பில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில்- முன்னேற்றம் போன்ற சில தோற்றப்பாடுகளை ஐ.நா. மனித உரிமை கவுன்சில் காட்டி வருகிறது. நாமும் அத்தோற்றப்பாடுகளை பார்த்து ஏமாந்து வருகிறோம் என்பதுதான் உண்மை. இந்த ஐ.நா. மனிதவுரிமை கவுன்சின் செயற்பாடுகள் நீர்ச்சுழல் போன்று அபாயமானது. ஈழத்தமிழர்களை உள்ளிழுத்து அவர்களின் வளங்களையும் சக்தியையும் விரயம் செய்வதற்கான ஏமாற்று வழிதான் இது. இதுவரை கிடைத்த ஒரேயொரு முன்னேற்றம் ஜெர்மனியில் உள்ள பிரேமன் நகரில் 2013 டிசம்பர் மாதத்தில் அமர்ந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பு ஒன்று மட்டுமே. ஐ. நா. மனிதவுரிமை கவுன்சில் அமர்வுகளை ஈழத்தமிழர் ஊடகங்கள் பேசும் அளவுக்கு நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளை எமது ஊடகங்கள் பேசுவதில்லை. இது ஏன் என்றும் நாம் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி- இவ்வாறானதொரு நிலைக்கான முக்கியமான காரணங்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கிறீர்கள்?**

பதில்- எமது போராட்டம் அழிக்கப்பட்டதன் பின்னணியையும் தொடர்ந்து எமது உரிமைகள் மறுக்கப்படுவதற்கான பின்னணியையும் புரிந்து கொள்வதற்கு பூகோள அரசியல் பற்றிய தெளிவு அவசியம். எமது போராட்டத்தை பற்றிய ஆழமான அறிவுமட்டும் இத்தகைய தெளிவை தரமாட்டாது. உலகளாவிய ரீதியில் மக்களின் போராட்டங்களுக்கு என்ன நடந்தது நடக்கிறது என்ற வரலாற்று



அறிவு அவசியம். இதை மைய நீரோட்ட ஊடகங்களை படித்து அறிந்து கொள்ள முடியாது. அவை மேற்குலக நன்மை சார்ந்தே பாதி உண்மைகளை மட்டும் செய்திகளாக வெளியிடும். இலங்கைத்தீவின் பூகோள கேந்திர முக்கியத்துவம் பற்றி, அதனுடன் பின்னிப் பிணைந்து நிற்கும் பூகோள அரசியலின் யதார்த்தம் பற்றி ஈழத்தமிழ் அரசியல்வாதிகளோ வேறெந்த தமிழர் தரப்போ மக்களுக்கு பெரிதாக



அறிவூட்டவில்லை. இதனால் நாம் இது பற்றிய புரிதல் போதாமையில் இருக்கிறோம். தமிழரின் ஊடகங்களும் தமிழருக்கு இந்த விழிப்புணர்வை கொடுக்க தவறுகின்றன.

இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவத்தினால் வல்லரசுகளுக்கு இத்தீவு மிகவும் தேவையாக உள்ளது. இது இன்று நேற்று தோன்றியதல்ல. காலனிய காலத்திலேயே தொடங்கி விட்டது. சிங்களவர்களை ஆரியர்களாக அன்று பிரித்தானிய ஆய்வாளர்கள் சித்தரித்தது இதற்காகவே. ஆரியவாதம் மேலோங்கி இருந்தகாலம் அது. இத்தீவின் தேவை வல்லரசுகளுக்கு இன்றும் இருப்பதால், ஆரியபோதை ஊட்டப்பட்ட சிங்கள மக்களை இன்றும் அது இலகுவாக கையாளுகிறது. முள்ளிவாய்க்கால் போர்குற்றங்களை விசாரணை செய்வோம் என்று சிங்களவர்களை பயமுறுத்துவதும் இன்று மேற்குலகத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். உலகெங்கும் கெட்டவர்களை அரசியலில் அமர்த்தி அவர்களை "நமது கெட்டவர்களாக" நட்பு கொண்டாடுவது அமெரிக்காவின் ஒரு கைவந்த கலை. அண்மையில் ஈஸ்டர் ஞாயிறன்று இலங்கை தீவில் நடந்த தாக்குதல்களின் பின்னணியிலும் இந்த மேற்குலக வல்லரசுகளின் கை இருப்பதை வரலாறு தெரிந்தவர்கள் புரிந்து கொள்ளலாம். இஸ்லாமியர்களை தமிழர்களிடம் இருந்து பிரிப்பதற்காக 1980களில் இலங்கையில் உருவாக்கப்பட்டதே இந்த இஸ்லாமிய தீவிரவாதம்.

**கேள்வி- வன்னியில் இறுதிக்கட்டப்போரில் இடம்பெற்ற பேரழிவுகளை ஏன் அனைத்துலக சமூகத்தால் தடுத்து நிறுத்த முடியாமற்போனது?**

பதில்- இன்றைய அனைத்துலக சமூகம் என்று நாம் எதை கருதுகிறோம். மேற்குலகமா? சீனாவா? இந்தியாவா? ஐ.நாடுகளா? இவற்றில் எவையாவது உலகில் நீதியை நிலை நாட்டுவதற்காக தன்னலம் இன்றி உழைக்கின்றனவா? இல்லையல்லவா? அப்படியானால் இதைத் தடுப்பதால் இவற்றில் எவருக்கு இலாபம்? எவருக்கும் அதைத் தடுப்பதால் இலாபம் இல்லாமல்போனது ஈழத்தமிழரின் துரதிஸ்டம். இருந்தாலும் இத்துணை மோசமாக ஒட்டு மொத்த மக்கள் அழிக்கப்படும் போது உலகம் கைகட்டி பார்த்துக் கொண்டு நிற்கும் என்பதை எம்மவர் எவரும் நம்பியிருக்கமாட்டார்கள். உலகில் நீதி எவ்வாறு கோலோச்சுகிறது என்பதையே இது காட்டுகிறது.

**கேள்வி- இறுதிப் போரின் நேரடிச்சாட்சிகளுள் ஒருவர் என்ற வகையிலும், ஒரு மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் என்ற வகையிலும் அங்கு சிறீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல் செயற்பாடுகளாக, மானுடத்திற்கெதிரான குற்றச்செயல்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கிறீர்கள்?**

பதில்- 1956ஆம் ஆண்டிலிருந்த நடந்த நூற்றுக்கணக்கான படுகொலைகள், 1983ஆம் ஆண்டு யூலை படுகொலைகள், தென்தமிழீழத்தில் தமிழ் கிராமங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டது, தமிழீழம் எங்கும் தமிழர்நிலங்கள் அபகரிப்பு, அரசியல்கைதிகள் சித்திரவதைகள், தமிழ்ப்பெண்கள் மேல் நடத்தப்பட்ட பாலியல் வன்முறைகள், இன்றும் தொடரும் நில அபகரிப்பு, இராணுவ ஆக்கிரமிப்பு எல்லாமே மானுடத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் தான். முள்ளிவாய்க்கால் இவற்றிற்கு சிகரம் வைத்தது. தற்கால உலக நீதி இந்த கொடிய இனவழிப்பை தடுக்கும் என்று நாம் நம்பியது எமது தவறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இறுதிப் போரில் இடம்பெற்ற பல சம்பவங்களை நிசோர் பணியாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டு விபரங்கள் சேகரித்தார்கள். அவற்றை தொடர்ச்சியாக நிசோர் அறிக்கைகளாக வெளியிட்டோம். 2008 டிசம்பர் மாதம் கொத்துக்குண்டுகள் வன்னியில் போடப்பட்டது பற்றியும் நிசோர் பணியாளர்கள் எடுத்து வந்த தரவுகளை வைத்து ஒரு அறிக்கை வெளியிட்டோம்.

இக்காலத்தில் நான் புதுக்குடியிருப்பில் இருந்த செந்தளிர் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்தேன். ஒரு குண்டு தாக்குதலின் போது இச்சிறுவர் இல்லத்திலும் குண்டுகள் விழுந்தன. அருகிலிருந்த வள்ளிபுனம் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முல்லைதீவு வைத்தியசாலையின் ஒரு கிளை மேல் சனவரி 2009 இல் எறிகணை தாக்குதல் நடந்தது.

2009 மார்ச் மாதம் நாம் இடம் பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்கு வந்துவிட்டோம். பொதுமக்கள் நெரிசலாக கூடாரங்களில் இருந்தோம். எமது கூடாரத்தை சுற்றி எறிகணைகளாலும் விமானத்தில் இருந்து போடப்பட்ட குண்டுகளாலும் நடந்த இறப்புக்கள் பற்றி எமது காதுக்கு செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. எமது கூடாரத்துக்கு

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# எத்தகைய சவால்கள் வந்தாலும் சனநாயக கடமைகளிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை

## யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் இராஜரட்ணம் கிரிசாந்தன்

**கேள்வி:- யுத்தம் நிறைவடைந்து பத்தாண்டுகளாகின்ற நிலையில் இராணுவத்தினர் யாழ்.பல்கலைக்கழகத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது ஏன்?**

பதில்:- யுத்தகாலத்திலும் சரி, அதற்கு பின்னரும் சரி இராணுவத்தினர் பல்கலைக்கழத்தினுள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. மாணவர்களும் அதனை விரும்பியிருக்கவுமில்லை.

அப்படியிருக்க, ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தின் பின்னர் நாட்டில் அசாதாரண சூழலொன்று உருவெடுத்தது. இக்காலத்தில் யாழ்.பல்கலைக்கழகமும் குண்டுதாரிகளின் இலக்கிற்கு உள்ளாகலாம் என்று அச்சமும் காணப்பட்டது. அதேநேரம் நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் சோதனையிட்டு மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் பாதுகாப்புத்தரப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தது.

இதற்கு பல்கலைக்கழக நிருவாகமும் அனுமதி அளித்திருந்த நிலையில் ஒட்டுமொத்த பல்கலைக்கழக சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு மாணவர்களாகிய நாமும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தோம்.

**கேள்வி:- சோதனை இடுவதற்காக வருகை தந்திருந்த இராணுவம் ஒளிப்படம் வைத்திருந்ததாக காரணம் காட்டி இரு மாணவர்களை கைது செய்வதற்கு ஏன் விளைந்தது?**




பதில்:- பல்கலைக்கழகத்தினுள் சோதனைகளைச் செய்து குண்டுத்தாக்குதல் சம்பந்தமான அச்சநிலையை போக்கி பாதுகாப்பினை உறுதி செய்வது உள்நுழைந்திருந்த இராணுவத்தின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்தில் வந்திருந்த இராணுவம் தமிழீழ தேசிய தலைவரின் ஒளிப்படம் இருப்பதையும், மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலையில் மருத்துவ பீட பழைய மாணவரான தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் இருப்பதையும் காரணம் காட்டி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.கபில்ராஜ் ஆகியோரையும் சிற்றுண்டிச்சாலை ஊழியரையும் கைது



செய்தனர்.

உண்மையிலேயே இன விடுதலைக்கான போராட்டத்தில் தலைமையேற்று நடத்தியவர் என்ற அடிப்படையிலும் தேசத்தின் விடுதலைக்காக ஆறு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து தன்னுயிரை தியாகம் செய்த முன்னாள் பல்கலை மாணவன் என்ற அடிப்படையிலும் அந்த ஒளிப்படங்கள் பல ஆண்டுகளாக காணப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக வந்த இராணுவம் தனது நோக்கத்தினை மாற்றி பயங்கரவாத தடைச்சட்டமும், அவசரகால சட்டமும் நடை முறையில் இருப்பதை தமக்கு சாதகமாக்கி ஒளிப்படம் இருப்பதை காரணம் காட்டி மாணவர்களை கைது செய்தது.

நீண்டகாலமாக இருக்கும் ஒளிப்படங்களுடன் எந்த சம்பந்தமும் இல்லாதவர்களை இராணுவம் தருணம் பார்த்து கைது செய்தமையானது கவலையளிப்பதோடு இராணுவத்தின் முகத்திரையை கிழித்து உண்மையான தோற்றத்தினை உலகறியச் செய்துள்ளது. இதற்கு நாம் கடுமையான கண்டனத்தினை வெளியிடுகின்றோம்.

**கேள்வி:- இராணுவம் பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து திட்டமிட்டு செயற்படுகின்றது என்று கருதுகின்றீர்களா?**

பதில்:- இராணுவத்தின் ஆழ்மனது சிந்தனை பல்கலைக்கழக மாணவர்களை அடக்குவதாகத்தான் இருக்கின்றது. யாழ்.பல்கலைக்கழகம் என்பது வெறுமனே கற்கைகளை வழங்கும் ஒரு ஸ்தாபனம் மட்டுமல்ல. தமிழர்களின் இனவிடுதலைப் போராட்டத்தில் ஆரம்பம் முதல் தற்போது வரையில் பின்னிப்பிணைந்துள்ளது.

ஆகவே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினர் என்றுமே கழுகுப்பார்வையுடன்தான் இருக்கின்றார்கள். இந்த நிலையில் போர் நிறைவுக்கு வந்திருந்த நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காவும், உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் முன்னெடுக்கப்பட்ட சனநாயக போராட்டங்களில் முன்னின்று உழைத்தார்கள்.

அதிலும் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ் மக்களின் கோரிக்கைகள் மலினப்படுத்தப்பட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்களில் பல்கலைக்கழக சமூகத்தின் பங்களிப்பு கணிசமாக இருந்தது. மிகமுக்கியமாக ஐ.நா.வில் இலங்கையின் பொறுப்புக்கூறலை செய்வதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டபோது அதனை மிகக் கடுமையாக பல்கலை சமூகம் எதிர்த்ததோடு சர்வதேசம் வரையில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை ஓங்கி ஒலிக்கச் செய்வதற்கான நடவடிக்கையில் நேரடியாகவே பங்கேற்றிருந்தது.

இதுமட்டுமன்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மேடையில் அரசியல் பிளவுகள் ஏற்பட்டபோது பல்கலைக்கழக மாணவர்கள் உயிர்களை ஆஃகுதியாக்கியவர்களுக்காக உணர்வுடன் நினைவேந்தலைச் செய்வதற்கான கடந்த ஆண்டு முன்வந்திருந்ததோடு இந்த ஆண்டும் அதற்குரிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு நிகழ்ந்த மறுதினமே பல்கலையில் நினைவஞ்சலியை நாம் செய்திருந்தோம். ஆகவே இதுபோன்ற பல விடயங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்தின் பங்குதாரர்களாக முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றமையை ஆட்சியாளர்கள் விரும்பவில்லைபோலும். ஆகவே தற்போதைய தருணத்தில் இராணுவத்தினை பயன்படுத்தி பல்கலை மாணவர்கள் மீது அடக்குமுறையை பிரயோகித்து அச்சுறுத்தி வைத்து விடலாம் என்று கருதுகின்றார்கள் என்பது வெளிப்படையாக தெரிகின்றது.

**கேள்வி:- கைதுசெய்யப்பட்ட மாணவர்களின் விடுதலை தொடர்பில் சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? அதில் முன்னேற்றங்கள் காணப்படுகின்றனவா?**

பதில்:- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையால் அவர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் அவசியமாகின்றது. அந்த ஒப்புதல் கிடைக்காத நிலையில்த்தான் அவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில்த் தான் சனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று கொழும்புக்குச் சென்றிருந்தோம். சனாதிபதிக்கு அவசர அலுவல்கள் காரணமாக கண்டிக்குச் செல்ல வேண்டியேற்பட்டுள்ளதால் அவரை நேரில் சந்தித்திருக்க முடியவில்லை.

இருப்பினும் சனாதிபதியின் செயலாளர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தோம். அவர்களுக்கு ஒளிப்படம் மற்றும் இராணுவத்தின் செயற்பாடுகளை தெளிவுபடுத்தியிருந்தோம். அவர்களும் அந்தவிடயம் பொருத்தமற்ற செயற்பாடு என்பதை ஏற்றுக்கொண்டதோடு சட்டமா அதிபர் புதிதாக பதவி ஏற்றுள்ள நிலையில் 13ஆம் திகதி திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கின்றார். அன்றைய தினமே இவ்விடயம் சம்பந்தமாக சாதகமான முடிவு கிடைக்கும் என்று

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் மீது நேரடியாக பாய்கின்றது என்பதற்கு பல்கலைக்கழக மாணவர்களின் கைது முன்னுதாரணம்.

## சனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா சிறப்பு பேட்டி



பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் மீது நேரடியாக பாய்கின்றது என்பதற்கு பல்கலைக்கழக மாணவர்களின் கைது முன்னுதாரணம் என சனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா சுட்டிக்காட்டியதோடு ஆபத்துக்கள் நிறைந்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுலாக்குவதற்கான முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**கேள்வி:- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் நாட்டில் அவசர கால சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- மிக மோசமாக நடைபெற்ற தற்கொலை குண்டு தாக்குதல்களை அடுத்து பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளிட்ட இரண்டு சட்டங்கள் அமுலில் இருக்கின்ற நிலையில் எதற்காக அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது என்ற கேள்வி இல்லாமில்லை.

தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் ஒரு சிறு குழுவினரே தொடர்புபட்டுள்ளமையால் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்தி நடவடிக்கைகளை எடுப்பதற்கு போதுமானது. எனினும், பயங்கரவாத தடைச்சட்டமானது கடந்த 41 ஆண்டுகளாக நாட்டில் அமுலில் உள்ளது. ஏறக்குறைய நிரந்தரச்சட்டம் போன்றாகி விட்டது.

அவ்வாறிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை தொடர்ந்தும் பயன்படுத்துவது நிரந்தரமாகவே பயங்கரவாத சூழலையும் அதற்கேற்ற அரசையுந்தான் உருவாக்குவதற்கு வழிசமைப்பதாய் இருக்கும்.

அவசரகாலச் சட்டத்தினைப் பொறுத்த வரையில் ஒரு மாதம் வரையில்த்தான் அதனை அமுலில் வைத்திருக்க முடியும். ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமாக இருக்கின்றது.

தற்போதைய தாக்குதல்களில் இஸ்லாம் அடிப்படை வாதத்தின் பிரகாரம் பணபலம் உள்ளிட்ட சகல வசதி படைத்தவர்கள் தான் ஈடுபட்டுள்ளார்கள். 1983 கலவரம், 30 ஆண்டு விடுதலைப்போராட்டம் ஆகியவற்றுக்கும் தற்போதைய தாக்குதல் களுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

அப்படிப் பார்க்கின்றபோது, நாட்டில் அவசரகால சூழல் ஏற்பட்டிருக்கின்றது என்ற அடிப்படையில்த்தான் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதற்கு பாராளுமன்றத்திலும் ஏகமனதான அங்கீகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளில் இவ்வாறு நடைபெறுவதுதான் வழமையாக இருக்கின்றது. ஆனால் அதன் பிரயோகத்தினையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

**கேள்வி:- பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பதனால் பல்கலைகழக மாண வர்களின் கைதுவரை அதன் எதிர்வினையை தமிழர்கள் உணர்ந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அவ்வாறிருக்க, அவசரகால சட்டமும் அமுலாக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு சட்டங்களால் தற்போது தமிழர் தாயகம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக கூறப்படுகின்றதே?**

பதில்:- சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதுதான் பொதுப்படை. ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகின்றது என்பதை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. நான் இதற்கு இரண்டு உதாரணங்களை கூற விளைகின்றேன். தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடிய குற்றச்சாட்டில் ஒரு கார் வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கார் வியாபாரம் செய்வதற்காகவே குறித்த நபருடன் தொலைபேசி வாயிலாக கதைத்துள்ளார். இவருக்கு அந்த நபர் சிரியா சென்றாரா? பயிற்சி பெற்றாரா? என்றெல்லாம் தெரியாது.

அப்படியிருக்க கார் வர்த்தகர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார். ஆனால் இவர் மீது அவசரகால ஒழுங்கு விதிகளிலோ, அல்லது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழோ வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. பொதுச்சட்டத்தின் கீழ்த்தான் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் ஏனைய விசாரணை அறிக்கைகளின் பிரகாரம் இவர் தொடர்புபட்டுள்ளாரா என்பதை கண்டறியும் வரையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




இதே போன்று தான் வெல்லம்பிட்டி தொழிற்சாலையில் கடமையாற்றிய பத்துபேரில் ஒன்பது பேருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழோ அல்லது அவசரகால சட்டத்தின் கீழோ கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு சட்டமா அதிபரின் அனுமதியின்றி பிணை அனுமதி வழங்க முடியாது. ஆகவே தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்கேத்திலும் சுற்றிவளைப்புக்களின் போதும் நடைபெறும் அதிகமான கைதுகள் பொதுச்சட்டத்தின் கீழ் தான் மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு பயங்கரவாத தடைச்சட்டமோ அவசரகால ஒழுங்கு விதிகளோ பயன்படுத்துவதாக இல்லை.

ஆனால், தாயகத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும், தேநீர்ச் சாலை நபர் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் பயங்கர வாதத்திற்கு ஊக்கமளிக்கின்றார்கள் என்று கூறி அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தெற்கில், குண்டுகள் வெடித்து அதனுடன் தொடர்புடைய எத்தனையோ கைதுகள் இடம்பெற்றுள்ளன. எத்தனையோ பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அது தொடர்பிலும் கைதுகள் இடம்பெற்றுள்ளன. என்ன குற்றம் இழைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடையவர்களை கண்டுபிடிப்பதற்காவே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அனைவரும் அறிவார்கள். அந்த குற்றத்தினை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் இன,மத,மொழி வேறுபாடு இல்லை. அப்பிடியிருக்கையில், தெற்கில் ஒருமுறையிலும் வடக்கில் இன்னொரு முறையிலும் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதனடிப்படையில் பார்க்கின்றபோது, அமுலில் இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகால நிலைமையில் தமிழர்களை இலக்குவைத்து வலிந்து பாய்கின்றமைக்கு பல்கலைக்கழக மாணவர்களின் கைது உதாரணமாகின்றது.

**கேள்வி:- பல்கலைக்கழக மாணவர்களின் கைது முறையற்றதொன்று என்ற பாரிய விமர்சனம் காணப்படுகின்றதே?**

பதில்:- முதலாவதாக, பல்கலைக்கழக வாளகத்தினுள் சோதனை நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டமைக்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது. இரண்டாவதாக கைது செய்யப்பட்ட பல்கலைகழக மாணவர்கள் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு வலு ஊட்டினார்கள் என்று கூறப்படுகின்றது. ஒளிப்படத்தினை அவர்கள் வைத்திருந்ததாகவும் கூறுகின்றார்கள்.

ஆனால் அவர்கள் பயன்படுத்திய கட்டடம் அவர்களுக்கு மட்டும் தனியான

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# உயிர்ப்பு நாளின் உயிர்ப்பலிகள்..

சுடரவன்

அது 1990 சிறிலங்கா தரப்பிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு அமைதி நிலவியகாலம். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் அரசியல் பணிமனைகளை அமைத்து தமது அரசியல் பணிகளை முன்னெடுத்து வந்த நேரம். காத்தான்குடி பகுதியில் அமைந்திருந்த அரசியல் பணிகளுக்கு பொறுப்பாக இருந்த போராளியின்(இவர் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்) கைத்துப்பாக்கி அங்குவைத்து சிலரால் பறித்துச் செல்லப்பட்டதாக செய்தி கிடைக்கிறது. இந்த சம்பவம் பற்றி ஆராய்ந்த விடுதலைப்புலிகள் அன்றிரவே காத்தான்குடியின் குறிப்பிட்ட பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் ஒன்றை மேற்கொள்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் விடுதலைப்புலிகளை நோக்கி துப்பாக்கிச் சூடு இடம்பெறுகிறது. சுட்டவர்களை துரத்திச் சென்ற விடுதலைப்புலிகள் அவர்களில் ஒருவரை AKMS ரகதானியங்கி சுரிகுழல் துப்பாக்கியுடன் கைதுசெய்கின்றனர்.குறித்த நபர் மூதூர் பகுதியில் இயங்கி வரும் ஜிகாத் அமைப்பைச் சேந்தவர் என்றும் பயிற்சியளிப்பதற்காகவே அவர் காத்தான்குடிக்கு வந்திருந்ததாகவும் தெரியவந்தது. தொடர்ந்து நடைபெற்ற தேடுதலில் பலர் கைதாகினர். இதில் இஸ்லாமிய மதபோதகர்களும் அடக்கம்.

குறித்த ஒரு வீட்டைச் சோதனையிட்ட போது அங்கிருந்து 22 வகை சுரிகுழல் துப்பாக்கி பன்புல் கட்டுகளுக்கு இடையே மறைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது. அத்துடன் முஸ்லீம் ஜிகாத் அமைப்பின் பல ஆவணங்களும் அங்கு கைப்பற்றப்பட்டன. அந்த ஆவணங்கள் அரபு மொழியில் எழுதப்பட்டவையாக இருந்ததுடன் சில இடங்களில் சங்கேதக் குறியீடுகளும் காணப்பட்டன. பின்னர் அந்த ஆவணங்கள் ஆராயப்பட்டபோது இந்த ஆயுத அமைப்பிற்கு காத்தான்குடியில் பயிற்சிகள் வழங்கப்படுவது, ஆயுதங்கள் பெறப்பட்ட வழிகள், நிதிநடவடிக்கைகள் போன்ற விபரங்கள் தெரியவந்தன.

அதில் இவ்வமைப்பிற்கு பின்புலமாக இருந்து உதவுவோர் பற்றி குறிப்பிட்ட பகுதியில் சங்கேத மொழியில் ‘அமைச்சர்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அது அப்போதைய முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம். எச் எம் அஷ்ரஃப் அவர்களையே குறிப்பதாக நம்பப்பட்டது. (அவுஸ்ரேலியாவில் வசித்துவரும் புகழ் பெற்ற கல்வியாளரான கலாநிதி அமீர்அலி அவர்கள் அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் முஸ்லீம் காங்கிரஸே இஸ்லாமிய தீவிரவாதத்தின் தோற்றுவாய் எனக்குறிப்பிட்டிருந்தது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.)

இச்சம்பவத்தை அடுத்து காத்தான்குடி இஸ்லாமிய மதத்தலைவர்கள், சமூகப்பெரியார்கள், விடுதலைப்புலிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இனி தாம் இவர்களின் நடவடிக்கைகளை அங்கு அனுமதிக்கப்போவதில்லை என்றும், மூகங்களுக்கிடையேயான நல்லிணக்கம் கருதி அனைவரையும் விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.இதன் அடிப்படையில் விடுதலைப்புலிகளால் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கையில் குறிப்பாக, கிழக்கில்




இத்தகைய இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தை ஆரம்பத்திலிருந்தே சிறீலங்கா இனவாத அரசுகள் நன்கறிந்திருந்தது மட்டுமன்றி, அவற்றை ஊட்டி வளர்த்து தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தியும் வந்ததே வரலாற்று உண்மை.

கிழக்கில் முஸ்லீம் ஊர்க்காவல் படையினர் என்ற பெயரில் சிறீலங்கா படைத்துறையால் உள்வாங்கப்பட்ட அநேகர் இந்த இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளில் அங்கம் வகித்தவர்களே. சிறீலங்கா படையினருடன் இணைந்து இவர்கள் கிழக்கில் மேற்கொண்ட தமிழினப்படுகொலைகள் அதிகம். தமிழர்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வழிபாட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இன்று தமிழர்களின் பூர்வீக கிராமங்கள் பல முற்றாக முஸ்லீம் கிராமங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

இவையனைத்தும் சிறீலங்கா பேரினவாத அரசுகளின் முழு ஆசிர்வாதத்துடன், முஸ்லீம் அரசியல்வாதிகளின் வழிகாட்டலில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களினால் அரங்கேற்றப்பட்டன.

இஸ்லாமிய பயங்கரவாதம் பற்றி இன்று உரத்துக்க கூச்சலிடும் எந்த அரசியல்வாதியும் அன்று திராய்க்கேணி கிராமம் அழிக்கப்பட்டபோது, வீரமுனையில் தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டபோது, மல்வத்தையில் தமிழ் பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டபோது வாய்திறக்கவில்லை. இன்று அறிக்கைமேல் அறிக்கைவிடும் ஆண்டகைகளுக்கும் அந்த மக்களின் அழுகுரல் கேட்கவேயில்லை.

1990களில் ஜிகாத் என்ற ஒரே இஸ்லாமிய தீவிரவாதக் குழுவே இயங்கி வந்த போதும் பின்னாளில் பல்வேறு குழுக்கள் உருவாக்கம் பெற்றன. இந்த ஜிகாத் குழு சிறீலங்கா அரசபடைகளின் துணை இராணுவக் குழுவாகவே செயற்பட்டு வந்தது. 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்கள் என நம்பப்படும் தேசிய தவ்ஹீத் அமைப்பின் உறுப்பினர்கள் குறைந்தது 26 பேர் சிறீலங்கா புலனாய்வுப்பிரிவின் ஊதியம் பெறும் உறுப்பினர்களாக உள்ளமை இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுக்கும் இடையேயான நெருக்கமான நீண்டகால உறவை வெளிப்படுத்தி நிற்கிறது.

2004 காலகட்டத்தில் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்து இருந்ததாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.(The Jihad Group, The Al Fatah Group, The Saddam Group,The Osama Group, The Jetty Group, The Knox Group, The Mujahadeen Group and The IslamicUnityFoundation) இத்தகைய குழுக்களின் தோற்றம், செயற்பாடுகள் பற்றி சிறீலங்கா அரசு மட்டுமன்றி அமெரிக்காவும் கூட நன்கறிந்தேயிருந்தது. இது பற்றி இலங்கையில் இருந்த அமெரிக்கத் தூதுவர் வொசிங்டனுக்கு அனுப்பிய இரகசியச் செய்தியை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது. இதில் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் பல்வேறு இஸ்லாமிய ஆயுதக்குழுக்கள் செயற்படுவதாகவும் இதன் பின்னணியில் முஸ்லீம் காங்கிரஸ் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

*(CONFIDENTIAL//NOFORN and written on June 09, 2004. The cable is signed by the US Ambassador to Colombo Jeffrey J. Lunstead.*

*“In the eastern Trincomalee District, Source identified three primary groups : the Knox group (named after a revered Englishman), Ossama group, and Jetty (primarily harbor workers). These groups have the backing of the Sri Lanka Muslim Congress. In the eastern Ampara District, Source identified the Mujahadeen group, comprising 150 armed members, as being stronger even than the Ossama group in Trinco.”)*

காலம் சென்ற முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம். எச் எம் அஷ்ரஃப் வித்திட்ட இந்த இஸ்லாமியத் தீவிரவாதம் காலாகாலமாக முஸ்லீம் அரசியல்வாதிகளால் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிங்கள பேரினவாத அரசியல்கட்சிகள் தமது ஆட்சிக்கு முட்டுக்கொடுக்க முஸ்லீம் அரசியல் தலைமைகளை நம்பியிருப்பதும் அதற்கு கைமாறாக அரசியல் உயர்பதவிகளையும்,

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# பெற்றால் தான் அன்னையா?

**தீபச்செல்வன்**

உலகின் தலைசிறந்த போராளிகள் அதிகமும் சூரியனுக்கும் புயலுக்கும் நெருப்பிற்கும் தான் அதிகம் ஒப்பிடப்படுகின்றனர். ஈழத்தின் சூரியனாய், ஈழத்தின் புயலாய், ஈழத்தின் நெருப்பாய் ஒப்பிடப்படுகின்ற தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், மனிதப் பிறப்பில் உன்னதமாக மதிக்கப்படும் தாய்மைக்கும் ஒப்பிடப்படுகின்றமைதான் தனிச்சிறப்பானது. தாயைப் போன்ற தலைவன் என்ற ஈரமான முகத்தை, அரவணைப்பை, அன்பை எங்கள் ஈழ மண் முழுதாய் அனுபவித்திருக்கிறது. அதுவே தலைவர் பிரபாகரன் உலகின் தலைசிறந்த போராளி, இதுவரை உலகம் கண்டிராத ஒப்பற்ற போராளி என்பதை சொல்கிற வரலாற்று உண்மை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகின் வீரம் செறிந்த ஒரு போராட்டம். தலைவர் பிரபாகரன், தமிழீழத்தின் அத்தனை படைக்கட்டுமானங்களையும் உருவாக்கி, உலகத்தின் கவனத்தையே ஈர்த்த தலைவர். தமிழர்களின் வரலாற்றில் சோழ மன்னன், தனது வீரத்தால் அழியாத சரித்திரத்தை எழுதிச் சென்றான். அதன் பின்னர் தலைவர் பிரபாகரன் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வழியாக முன்னெடுத்த போர் மரபுகளும் நிலக் கட்டுமானங்களும் புதியதொரு வீர வரலாற்றையும் நிர்வாகத் திறனையும் எழுதியுள்ளமை இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் சாதனையாகும்.

சிறந்ததொரு தலைவன், வீரமான தலைவனின் ஈரமான பக்கங்கள்தான், அவரை தாயைப் போன்ற தலைவன் என்று உலகத் தமிழினத்தால் மெச்ச வைக்கின்றது. தமிழர்களின் தலைசிறந்த தலைவனாக, எமது உரிமையையும் நிலத்தையும் வென்றெடுப்பதில் கொண்டிருந்த வீரத்திற்கு நிகராக ஈழ நிலத்தின் ஒவ்வொரு உயிர்களையும் ஒரு தாயைப் போல தலைவர் நேசித்தார். ஒரு தாயைப் போல தலைவர் காத்து நின்றார். அன்னையர் தின நாட்களில் அன்னை போலான எம் தலைவரின் பக்கங்களை பேசுவது, இன்றும் எமது மண்ணை எப்படி நாம் கட்டமைத்துக்கொள்ள வேண்டும்



என்பதை தான் வலியுறுத்துகிறது, அல்லது வழிகாட்டுகிறது.

இன்று ஈழத்தில் குழந்தைகளின் பாதுகாப்பு பெருங்கேள்விக் குறியாகிவிட்டது. சிறுவர் இல்லங்கள் என்ற பெயரில் பணம் பறிப்புக்கள் நிறையவே நடக்கின்றன. பேருந்துகளில் குழந்தைகள் பிச்சை எடுக்கின்றனர். ஊது பத்தி விற்கும், கடலை மா பொதிகளை விற்கும் குழந்தைகளை தினமும் வீதிகளில் காண்கிறோம். அவர்களுக்கு சரியான கல்வி இல்லை. அவர்கள் சிறுவர் தொழிலாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருள் சுமக்கும் தொழிலாளியாக, அதற்கு அடிமையாகும் குழந்தைகளாக இன்றைய ஈழத்தின் தலைமுறை மாற்றப்பட்டுள்ளது. மிகக் கடுமையான போர் காலத்தில் – தமிழீழ காலத்தில் இந்த நிலையில்லை.



தலைவர் அவர்களினால் உருவாக்கப்பட்ட செஞ்சோலை அமைப்பு, ஆதரவற்ற குழந்தைகளின் இல்லமானது. குழந்தைகளின் மகிழ்ச்சியான பாதுகாப்பான வீடாக அமைந்த செஞ்சோலை, போரினாலும், சமூகப் பிரச்சினைகளாலும் அனாதரவாக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளித்தது. தமிழீழக் காலத்தில் தெருக்களில் ஆதரவற்ற குழந்தைகளைக் காண முடியாது. பிச்சை எடுக்கும் குழந்தைகளைக் காண முடியாது. தமிழீழ நிலத்தில் எந்தவொரு குழந்தைகளும் அல்லல்படக்கூடாது என்ற பெருந்தாயுள்ளத்துடன் செஞ்சோலை உருவாக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கிய செஞ்சோலைக் குழந்தைகள் பேரன்பு கொண்ட தாய்மையால் வளர்த்து ஆளாக்கப்பட்டனர். இவ்வாறு ஆளாக்கப்பட்ட பலரும் இன்று மிகப் பெரிய இடத்தில் உள்ளனர். தலைவரால் வளர்க்கப்பட்ட அந்தக் குழந்தைகள், எமது தலைவனின் தாயுள்ளத்திற்கு சாட்சிகளாக இன்றும் வாழ்கின்றனர். அவர்களுக்கு கல்வி, திருமண வாழ்க்கை என யாவும் சிறப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. பலர் பல்கலைக்கழகம் சென்று இன்று நல்ல தொழில் நிலைகளில் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். செஞ்சோலை மாத்திரமின்றி, காந்தரூபன் அறிவுச்சோலை, குருகுலம், பாரதி இல்லம் என இல்லங்களை அமைத்து குழந்தைகள் காக்கப்பட்டனர்.

போராளித் தலைவன், போரில் மாத்திரமே கவனம் செலுத்துவார் என்ற பொது அபிப்ராயத்தை மாற்றிய பெருமை தலைவருக்கு உண்டு. ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாத்திரமல்ல, ஆதரவற்ற தாய், தந்தையருக்குமான தமிழீழ முதியோர் இல்லங்களை தலைவர் அமைத்தார். மதிவதனி பிரபாகரன் அவர்கள், ஈழத்தின் மிகச் சிறந்த முதியோர் இல்லத்தை கிளிநொச்சியில் திறந்து வைத்த அந்த நாட்களை எவரும் மறந்துவிட முடியாது. தன் குழந்தைகளைக் காட்டிலும், தன் பெற்றோரைக் காட்டிலும் இந்த மண்ணின் குழந்தைகளையும் முதியவர்களையும் நேசித்தவர் தலைவர் என்பதை சிங்கள தலைவர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இனப்படுகொலையாளி சரத்பொன்சேகாவும், இனவாதி ஞானசார தேரரும்கூட பிரபாகரன் அவர்கள் சிறந்த தலைவர் என்றும் அவர் தன்னுடைய மக்களுக்கு சிறந்த தலைவராக வாழ்ந்தார் என்றும் அப்படி சிங்களத் தலைவர்கள் எவருமில்லை என்று கூறியதும் இங்கே சுட்டிக்காட்ட தக்கது. எதிரிகளாலும் நிராகரிக்க முடியாத தலைவன், எமது தலைவர். அதனால்தான் இன்றும் செஞ்சோலை என்ற பெயரை சிங்கள அரசால் மாற்ற முடியாதுள்ளது. இன்றும் செஞ்சோலை இலங்கை அரசினால் இயக்கப்பட்டாலும், அந்தப் பெயர் பலகையுடன் பள்ளி செல்லும் பேருந்தை காண்கையில் தலைவரின் நினைவு எவருக்கும் வரும்.

அண்மையில் ஒரு முன்னாள் போராளி அண்ணா, ஒருவர் பேசிக் கொண்டிருந்தபோது, தலைவர் தன்னை பிள்ளை என்றுதான் அழைப்பார் என்றார். “என்ட பிள்ளை“ என்றழைக்கும் எங்கள் தாயுமானவர், தந்தையுமானவர் என்று அந்த நாட்களை நினைவுகூர்ந்தார். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைப் போரில் பங்குபற்றிய சிங்கள இராணுவத்தினன் ஒருவன், வெற்றிக் பிறகு, மீன் சந்தையில் மீன் வெட்டி பிழைப்பு நடத்துவதாக ஒரு செய்தி இணையங்களை அலங்கரித்தது. தலைவர் பிரபாகரன், போராளிகளுக்கும் அவர்களின்

தொடர்ச்சி ➔

## தொடர்ச்சி →

வாழ்வுக்கும் கொடுத்த முக்கியத்துவத்தை, சிங்கள அரசு, தனது படைகளுக்கு துளியளவும் செய்யவில்லை என்பதை ஒவ்வொரு சிங்களவர்களும் இனி ஏற்றுக்கொள்வார்கள்.

தலைவர் பிரபாகரன், நவம் அறிவுக்கூடத்தை திறந்து வைத்து, அங்கு போராட்டத்தில் அவையங்கள் பாதிக்கப்பட்ட, போராளிகளுக்கு சிறந்ததொரு வாழ்வை அமைத்துக் கொடுத்தார். அவையங்கள் பாதிக்கப்பட்டாலும் மனதால் எழுந்து நிற்கும் போராளி சமூகத்தை உருவாக்கி காட்டினார். தற்போதும் முன்னாள் போராளிகள் நவம் அறிவுக்கூடத்தை மீட்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அது தற்போது சிங்கள இராணுவ படைமுகாமாக உள்ளது. நவம் அறிவுக்கூட கட்டடங்கள், வளாகம் யாவும் அவையங்கள் பாதிக்கப்பட்ட போராளிகளுக்கான வாழ்க்கை முறைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

பாதைகள், மண்டபங்கள், மலசலகூடங்கள் என்று எல்லாம், போராளிகள் எவரும் எவரிலும் தங்கி வாழாது தாமாக வாழக் கூடிய முறையில்



அமைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் போராளி சகோதரி ஒருவர் கூறினார். அதிகம் பேசாதவர் தலைவர். ஆனால் அவர் ஈழ விடுதலைப் போராட்டத்தில் உருவாக்கிய ஒவ்வொரு கட்டமைப்பும் செயலும் குறித்து நாம் அதிகம் பேசிக் கொண்டிருக்கலாம். உண்மையில், வரலாறு அதிகமதிகம் பேசப் போகின்றது என்பதே இதன் அர்த்தமாகும். குழந்தைகள், போராளிகள், மாவீரர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என்று ஒட்டுமொத்த சமூகத்திற்குமான வாழ்க்கையை வரைந்து அதனை நடைமுறைப்படுத்தி வரலாற்றின் புதிய பக்கங்களில் இடம் பிடித்த அந்த

தலைவனின்றி எமது நிலம் இன்று பெரும் அல்லப்படுகின்றது.

மனிதர்களுக்கு மாத்திரமா பெருந்தாய்மையாக தலைவர் இருந்தார்? எமது நிலத்தின் வனத்திற்கும், மரங்களுக்கும்தான் தாய். எங்கள் மண்ணிற்கும்தான் தாய். மண்ணையும் வனத்தையும் மரங்களையும் பயிர்களையும் காக்கவும் மேம்படுத்தவுமான கட்டமைப்புக்கள் இதனை நடைமுறையாய் சரித்திரமாய் எடுத்துரைக்கின்றன. வடக்கு கிழக்கில் பிரபாகரன் காலத்திலேயே காடுகள் அப்படியே பாதுகாக்கப்பட்டன என்று சிங்கள அதிபர் மைத்திரிபால சிறிசேன ஒப்புக்கொள்கிறார். உண்மையில் எதிரியால்கூட இவற்றை எல்லாம் மறுக்க முடியாது. ஒரு உன்னதமான இலட்சியத்திற்காக, நியாய வழியில் போராடிய ஒரு தலைவனால்த்தான், மக்களையும் மண்ணையும் வனங்களையும் மரங்களையும் நேசிக்க முடியும். எமது தாய்மை நிறைந்த தலைவனை சிங்கள தேசமும், உலகமும், கள்ள மௌனம் விட்டு, முழு மனதோடு ஏற்றுக்கொள்கிற ஒரு காலம் மலர்ந்தே தீரும். அந்த நாட்களில்த்தான் எமது நிலமும் இனமும் விடுதலையைப் பெற்று வாழும்.

---

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## வவுனியாவில்

பயிற்சி நிலைய புனர்வாழ்வு முகாமில் ஒருவரே தற்போது புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். வடக்கின் கூட்டுறவுத்துறை காணாமலாகிக் கொண்டிருக்கின்றது. இந்த பயிற்சி நிலையத்தினை இராணுவத்தினரிடமிருந்து மீட்ட முடியாத நிலை தொடர்கின்றது. இந்நிலையில் இங்கு முதற்கட்டமாக 158பேரை அங்கு கொண்டு சென்று தங்க வைப்பதற்காக வெளிவிவகார அமைச்சரும் கள ஆய்வு பயணத்தினை நிறைவு செய்திருக்கின்றார்.

அப்படியிருக்க, தாயக தமிழ் உறவுகள் அவலங்கள் நிறைந்த அகதி வாழ்வின் வலிகளை உணர்ந்தவர்கள். அதனை அனுபவித்தவர்கள். அவ்வாறு இருக்கையில் நெருக்கடியில் அகதிகளாக இருக்கும் பிறிதொரு இனக்குழுவினை அரவணைக்க அவர்கள் ஒருபோதும் தயங்கியதில்லை.

ஆனால், குறித்த இனக்குழுவிற்கான அடைக்கலம் என்ற பெயரில் அரசாங்கம் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலொன்றையே தாயகத்தில் அரங்கேற்ற நினைக்கின்றது. அதற்கு இடமளிக்க முடியாது என்பதற்காகவே மேற்படி குழுவினரை வவுனியாவில் தங்க வைக்க வேண்டாம் என்ற நிலைப்பாடு வலுவாக எழுந்துள்ளது.

விடுதலைப்போராட்டத்தினை வலுவிழக்கச் செய்வதற்கு பாகிஸ்தான் ஆயுதங்கள், படைகள், உள்ளிட்ட பல்வேறு வசதிகளை தென்னிலங்கைக்கு வழங்கியிருந்தது. ஆனால் அந்த நாட்டின் அகதிகளை தனது நிலத்தில் தங்கவைப்பதற்கு கூட செய்நன்றி மறந்து தென்னிலங்கை அச்சம் கொள்கின்றது.

மறுபக்கத்தில் இலங்கையில் மிகப்பெரிய நிலப்பரப்பு கொண்ட வடமத்திய மாகாணம் இருக்கின்றது. அங்கு முஸ்லிம் மக்கள் 70000க்கும் அதிகமானோர் வாழ்கின்றார்கள். அங்கு இந்த மக்களை தங்க வைப்பதில் அரசாங்கத்திற்கு என்ன பிரச்சினை என்ற கேள்வியை வவுனியா மக்கள் எழுப்பிவருவதிலும் நியாயம் உண்டு.

இவற்றையெல்லாம் விடவும் தன்நாட்டு அகதிகள் சம்பந்தமாக இலங்கையில் உள்ள பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் தூதரகங்கள் கூட அதீத சிரத்தை எடுத்துக்கொண்டதாக இல்லை. ஐ.நா அகதிகள் முகவரலாலயமும் கூடிய கவனத்தினைக் கொண்டதாக இல்லை. கனடா, மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிடத்தில் இந்த அகதிகளை பொறுப்பேற்குமாறு கோரப்பட்டுள்ள போதும் அதுகுறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக இல்லை.

இவ்வாறான நிலையில் தனது நாட்டின் பிரசைகளுக்கே பூரணமான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் பரிதவித்துக்கொண்டிருக்கும் அரசாங்கம் இந்த அகதிகள் சம்பந்தமாக கூடிய கவனம் எடுப்பதென்பது நாங்கள் அகதிகளை பராமரிக்கும் அளவிற்கு சனநாயக தளத்தினை கொண்டிருக்கின்றோம் என்று உலகிற்கு காட்டி நற்பெயரை பெறுவதற்கே ஆகும்.

ஆகவே அரசாங்கம் ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிப்பதற்காகவே வவுனியாவை அகதிகளை தங்கவைப்பதற்காக தெரிவு செய்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றுள்ளது.

---

8 ஆம் பக்க தொடர்ச்சி →

## உயிர்ப்பு நாளின் உயிர்ப்பலிகள்..

சலுகைகளையும் வழங்குவது மாத்திரமன்றி இவர்களின் பின்னணியில் உள்ள இந்த இஸ்லாமிய தீவிரவாதக்குழுக்களின் நடவடிக்கைகளையும் கண்டுகொள்ளாமல் இருக்கும் கைங்கரியத்தையும் செய்து வருகின்றன.

‘நானே தமிழர்களின் காணிகளைப் பறித்தேன், அவர்களின் ஆலயத்தைக் கைப்பற்றி அதனை அழித்து முஸ்லீம்களுக்காக சந்தையொன்றை அமைத்தேன், நானே முஸ்லீம் இளையோருக்கு ஆயுதங்களை வழங்கினேன், நீதியாளரின் தீர்ப்பை மாற்றி எழுத வைத்தேன்” என்று மிக வெளிப்படையாகக் கூறும் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவினால் இன்றும் கிழக்குமாகாண ஆளுநராக நீடிக்க முடிகிறது. ஊழல்மோசடி, போதைப்பொருள் கடத்தல் காடுகளை அழித்து காணி பிடித்தமை என குற்றச்சாட்டுகள் அடுக்கப்படும் ரிசாட் பதியுதீன் அமைச்சர் பதவியில் தொடர முடிகிறது. இவற்றுக்கு மேலாக இந்த இருவர் மீதும் இஸ்லாமிய தீவிரவாதத் தொடர்புகள் பற்றி பல்வேறு தரப்புகளில் இருந்தும் வலுவான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற போதும் சிறீலங்கா அரசு ஒப்புக்கு கூட விசாரணை நடத்த முன்வரவில்லை. உயிர்த்தெழுந்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பலரும் பல்வேறு தரப்புகளை நோக்கி விரல்களை நீட்டுகின்றனர். உலகளாவிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் செயல் என்கின்றனர் சிலர். இல்லையில்லை இதன் பின்னணியில் இருப்பது அமெரிக்கா என்கின்றனர் சிலர். இந்தியாவாகக்கூட இருக்கலாம் என்கின்றனர் வேறுசிலர். எது எப்படி இருந்த போதும் இந்த பயங்கரவாத நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டவர்கள் இலங்கை முஸ்லீம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களே. இவர்களின் உருவாக்கத்திலும் வளர்ப்பிலும் பிரதான பங்குவகித்தது சிறீலங்கா பேரினவாத அரசே. அத்துடன் இந்த பயங்கரவாதத் தாக்குதலால் கூட நன்மையடைந்த ஒருதரப்பு இருக்குமானால் அது சிங்கள பேரினவாதத் தரப்பாக மட்டுமே இருக்க முடியும். எனவே இங்கு முதன்மைக் குற்றவாளிகள் என்ற வகையில் முதலில் கண்டிக்க வேண்டியதும் தண்டிக்க வேண்டியதும் சிறீலங்கா சிங்களப் பேரினவாதிகளையே.

5 ஆம் பக்க தொடர்ச்சி →

## எமது உரிமைகள் மறுக்கப்படுவதற்கான

மிக அருகில் விழுந்த ஒரு குண்டில் குழந்தைகள் உட்பட பலர் பலியானார்கள்.

**கேள்வி- இனவழிப்புக்கான நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய தமிழர் உரிமைகளை மீள நிலை நிறுத்த தமிழர் தரப்புகள் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைப் பார்க்கிறீர்கள்?**

பதில்- நாம் ஒரு போராடும் மக்கள். மேற்குலக அரசுகளுடன் கைகோர்த்து போராட்டத்தில் வெற்றி பெறலாம் என்பது மூடத்தனம். நாம் ஒரு போதை யூட்டப்பட்ட அரசியல் தெளிவற்ற மக்களாக இருந்தால் மட்டுமே மேற்குலகம் எம்மோடு கைகோர்க்கும். அப்போதுதான் எம்மை சுலபமாக அது கையாளலாம். ஈழத்தமிழர் விடுதலைக்காக நாம் இரண்டு வழிகளை ஒரே நேரத்தில் பின்பற்றலாம். முதலாவது உலகெங்கும் உள்ள பல போராடும் மக்களுடன் நாம்கை கோர்க்க வேண்டும். நாம் வாழும் நாடுகளில் உள்ள உலக மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் மக்களுடனும், சிங்களவர்கள் உட்பட, நாம் இணைய வேண்டும். இரண்டாவது, தேசியம் மட்டுடுமே நீதிக்கான வழியல்ல என்பதை உணர்ந்து எமது அமைப்புக்களிலும், எமது சொந்த வாழ்க்கையிலும் நாம் சமூக நீதியை முன்னிறுத்த வேண்டும். சாதி ஒழிப்பு, சமத்துவம், ஆடம்பரமின்மை, கூட்டுணர்வு போன்றவை எம்மை உண்மையான விடுதலைக்கு தயார் செய்யும். விடுதலை ஒரு நீண்ட பயணம். ஈழத்தமிழராகிய நாம் அதில் நெடுந்தூரம் வந்து விட்டோம். மிகுதி தூரத்தையும் உறுதியுடன் கடக்கலாம். இன்று நாம் பல பிரிவுகளாக பிரிந்து நிற்கிறோம். பிரிவுகள் இயற்கையானதே. பிரிவுகளிடையேயும் தேசிய விடுதலையும் சமூக நீதியும் என்ற இரட்டை நோக்கம் பற்றிய தெளிவு இருந்தால் நாம் ஒன்றாக பயணிக்கலாம். இலக்கை அடையலாம்.

7 ஆம் பக்க தொடர்ச்சி →

## பயங்கரவாத தடைச்சட்டம்

உரித்தினைக் கொண்டிருக்கவில்லை. பதவிகள் மாறுகின்றபோது பதவிகளை ஏற்பவர்கள் அந்தக் கட்டடத்தினை பயன்படுத்துவதே வழமையாக இருக்கின்றது. அப்படியிருக்கையில், இந்த கைதின் தன்மையிலேயே பாரிய சந்தேகங்களும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

இவ்வாறு இருக்கையில் தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை அமுலாக்குவதற்குதற்கான நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக அடுத்த வாரமளவில் பாராளுமன்றத்தில் அது சம்பந்தமான விவாதத்தினை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுலாகின்றபோது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று இல்லை.

அவசரகால நிலைமைகளின் போதும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் கைதானவர்கள் அந்த சட்டங்கள் நீக்கப்பட்டாலும் அவர்கள் மீதான வழக்குகள் அந்தச்சட்டங்களின் தன்மைகளின் அடிப்படையில்த்தான் இருக்கும். அதில் மாற்றங்கள் நிகழும் என்று கூறுவது தவறாகும்.

**கேள்வி:- புதிய பங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் காணப்படுகின்றபோதும் தற்போது உலகத் தீவிரவாதத்தினை கட்டுப்படுத்தவதற்கு அவசியமானது என்று காரணம் கூறப்படுகின்றதே?**

பதில்:- முதலாவதாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அமுலாகின்றபோது, அவசரகால ஒழுங்கு விதிகள் நாட்டில் நிரந்தரச் சட்டமாக மாற்றமடையும் சூழலே ஏற்படும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக நீதிக்காக, உறவுகளின் விடுதலைக்காக, சொந்த நிலங்களுக்காக போராடும் தமிழினத்தின் சனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள் அனைத்துமே கட்டுக்குள்ளாகும் பாரிய ஆபத்து உள்ளது.

இதனை விடவும் நாட்டின் அன்றாட நிலைமைகள் ஒருவிதமான பதற்றத்துடனே இருக்கும் நிலைமைகளே ஏற்படும். தொழிற்சங்க போராட்டம் முதல் தனி நபரின் கோரிக்கைகளையே முழுமையாக கட்டப்படுத்தும் வல்லமை இந்த சட்டத்திற்கு காணப்படுகின்றது.

மேலும் தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் மரண தண்டனை உள்வாங்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் தனை சட்டமாக்குவதென்றால் சர்வசன வாக்கெடுப்பு அவசியமாகும். இந்த விடயத்தினை உயர்நீதிமன்றம் குறித்த சட்டம் மீதான வியாக்கியானத்தில் குறிப்பிட்டிருக்கும். ஆகவே அச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது அந்த விடயம் முக்கியமானதாக கருதப்படும். ஆகவே அவசாரகால சட்டமும், பயங்கரவாத தடைச்சட்டமும் நீக்கப்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அமுலாக்கப்படுவது தமிழர்களை மேலும் நெருக்கடியான கட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு சூழலையே உருவாக்கும்.

**கேள்வி:- ஒருவர் வெளிநாடு சென்று பயிற்சி பெற்றாலோ பயங்கரவாத தொடர்புகளைப் பேணிவந்தாலோ அவரை கைது செய்வதற்கு போதுமான சட்ட ஏற்பாடுகள் நாட்டில் போதுமானதாக இல்லையென பிரதமர் ரணில் கூறியிருக்கின்றாரே?**

பதில்:- உண்மையிலேயே அது சட்டங்கள் பற்றிய அறியாமையின் வெளிப்பாடாகும். அவசரகால சட்டம் அமுலில் இல்லாது விட்டாலும், பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இல்லாது விட்டாலும், பொதுச்சட்டத்தின் கீழ் உள்ள குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தின் 120, 121 ஆம் பிரிவுகளின் அடிப்படையில் அரசுக்கு எதிராக எத்தகைய நபர்கள் குற்றம் புரிந்தாலும் அவர்கள் மீது விசாரணைகளை, வழக்குகளை தாக்கல் செய்து தண்டனை வழங்க முடியும்.

இதனை விடவும், குண்டுத்தாக்குதல் பற்றிய தகவல்கள் முன்கூட்டியே அறியப்பட்டுள்ளதாகவும் அதனை தெரிந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. குண்டுத்தாக்குதல்கள் சம்பந்தமாக ஒருவர் மீது ஒருவர் விரல் சுட்டும் நிலைமையில் பொறுப்புக்கூறுபவர் யார் என்பதும் வினாவாகின்றது.

குறிப்பாக, பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட முக்கிய தரப்புக்கள் அறிந்துள்ளதாக கூறப்படுகின்றது. குற்றவியல் தண்டனைக்கோவைச் சட்டத்தின் கீழ் நட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் தகவல்களை அறிந்து கொண்டு மௌனம் காப்பதும் குற்றமாகும்.

அதனடிப்படையில் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதே போன்று தேசிய பாதுகாப்பு சார்ந்த விடயத்தில் தமது கடமையை சரியாக செய்யவில்லை என்ற அடிப்படையிலும் அத்துறை சார்ந்தவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கும் குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன.

6 ஆம் பக்க தொடர்ச்சி →

## எத்தகைய சவால்கள்

நம்பிக்கை அளித்துள்ளனர்.

**கேள்வி:- மாணவர்களின் கைது அடுத்து நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் மக்களின் நீதிக்கான போராட்டத்திலும் ஒட்டுமொத்த பல்கலை மாணவர்களின் பங்களிப்பினை வலுவிழக்கச் செய்துவிடுமா?**

பதில்:- நாம் மக்களின் நியாயமான நீதிக்கான கோரிக்கைகளுக்கும், உயிர்நீத்தவர்களுக்காகவுந்தான் குரல் கொடுத்து வருகின்றோம். இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஏற்பாட்டுக்குழுவில் எமது அங்கத்துவமும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் நாம் முழுமையான பங்குதாரர்களாக இருப்போம். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. மாணவர்களின் கைது இடம்பெற்றவுடனேயே அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும் என்றே வலியுறுத்தினார்கள். இருப்பினும் பதற்றமான நிலைமையை தோற்றுவிக்க விரும்பவில்லை. சட்டங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளதால் அதனைக்கூட சட்ட ரீதியாக அணுக வேண்டும் என்ற மனநிலையில் பொறுமை காத்து வருகின்றோம். மாணவர்களின் விடுதலைக்காக அரசியல் பேதமின்றி பலதரப்பினரும் முன்வந்துள்ளனர். அவர்களுக்கு எமது நன்றிகளை கூறுவதுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் பின்னடிப்புக்களைச் செய்தாலோ அல்லது எதிர்காலத்தில் திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுத்தாலோ நாம் கைகட்டி வேடிக்கை பார்க்கப்போவதில்லை.

அரசாங்கத்துடன் மல்லுக்கட்ட வேண்டும் என நாம் சிந்திக்கவில்லை. ஆனால் மாணவர்களின் சக்தி மாபெரும் சக்தி என்பதையும் உணரச்செய்வதோடு ஒட்டுமொத்த பல்கலைக்கழக சமூகமும், எமது மக்களும் நிச்சயமாக சனநாயக ரீதியில் வீதிக்கு இறங்குவதில் பின்னிற்கப் போவதில்லை. இதற்கு அனைத்து தரப்பினரதும் ஆதரவும் கிடைக்கும் என்ற பெருநம்பிக்கையும் எமக்குள்ளது. தற்போது மாணவர்களின் விடுதலைக்காக நாம் செல்லும் சுமுகமான பயணம் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஒருவேளை அதில் தோல்வியைச் சந்தித்தால் அவர்களின் விடுதலைக்கான குரல் ஓங்கி ஒலிக்கும். அதேநேரம் சனநாயக போராட்டங்களை முன்னெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம். அச்சமயத்தில் நாம் பின்னிற்கப்போவதில்லை என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

# முள்ளிவாய்க்காலிலிருந்து ஒரு பகிரங்க அறைகூவல்!



**கணிதன்**

தமிழ்த் தேசிய இனத்தின் விடிவிற்கான உரிமைக்குரல் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் ஒரு கட்டமைப்புசார் இனப்படுகொலையுடன் தமிழர்களின் நீதிக்கான யுத்தம் மே 18 இல் மௌனிக்கச் செய்யப்பட்டது.

27 சர்வதேச நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் சிறீலங்காவின் ஆட்சியாளர்களுடன் கைகோர்த்து இனப்படுகொலை அரங்கேற்றத்திற்கு அச்சாணியாக இருந்தன. இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டு பத்தாண்டுகளாகிவிட்டன. ஆனால் இன்றும் கட்டமைப்பு சார் இனவழிப்பு செவ்வனே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழனம் எழுபது ஆண்டுகளாக போராடுகின்றது. சனநாயக ரீதியில், ஆயுத ரீதியில் என்பதையெல்லாம் கடந்தே வந்திருக்கின்றது. 2009ஆம் ஆண்டு மே 18 மௌனிப்புக்கு பின்னர் எம் தமிழினத்தின் விடுதலையை தன் தோளில் சுமக்கும் பொறுப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எடுத்தது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் நாங்களே என்று சிங்கள பெருந்தேசியவாதிகளின் முன்னிலையில் மார்பு தட்டினீர்கள். வெளிநாடுகள் உட்பட எங்கு சென்றாலும் உங்கள் மீது தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற முத்திரையையே பதித்தீர்கள். அதுமட்டுமா, 2009 இலிருந்து 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 பாராளுமன்ற தேர்தல் வரையில் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்களிடத்தில் இன்னுயிர்களை ஈகம் செய்தவர்களையும், உறவுகளைத் தொலைத்தவர்களையும், சிறையில் வாடிக்கொண்டிருப்பவர்களையும் பிரதானப்படுத்தி ஆணை கேட்டீர்கள். பாதிக்கப்பட்ட நாமும் பெரும் நம்பிக்கையில் பெருவாரியாக வாக்குகளை அள்ளி வழங்கினோம்.

எமது நியாயமான கோரிக்கைளையும், உரிமைகளையும் பெற்றுக்கொடுத்து அபிலாசைகளை பூர்த்தி செய்வார்கள் என்ற நம்பிக்கையில் ஏகப்பிரதிநிதித்துவ அந்தஸ்து வழங்கிய கூட்டமைப்பினரான நீங்கள் அல்லவா இதற்கான அனைத்துப் பொறுப்பினை ஏற்க வேண்டும். தற்போது உறவுகள் மறக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு மன கிலேச்சத்துடன் அன்றாட பொழுதை நகர்த்த வேண்டிய மிக மோசமான நிலைக்குள் அல்லவா நாம் இருக்கின்றோம். ஆனால் தெற்காசியாவின் சாணக்கியன் என்று பெயர் பூத்திருக்கும் சிரேஸ்ட தலைவர் சம்பந்தன் ஐயா எமது நலன்களை மறந்து அரசாங்கத்துடன் தேனிலவு அல்லவா கொண்டாடிக்கொண்டிருக்கின்றார். இத்தனை காலம் சென்றும் தென்னிலங்கையை நம்பிக்கொண்டிருக்கும் உங்களின் பெரும் தன்மையை என்னவென்று சொல்வது.

அன்று, முள்ளிவாய்க்கால் எனும் ஒரு குறுகிய நிலப்பரப்பில் வன்னி மாவட்ட மக்களாகிய நாம் முடக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நன்கறிந்திருந்த ஐயா சம்பந்தரும் அவருடைய பரிவாரங்களும் எம்மை விடுவிக்கும்படி ஒரு உரத்த குரலை உங்களால் முன்வைக்க முடியாமல் போனதேனோ?

முள்ளிவாய்க்காலில் விதையாகிப்போன தேசிய இன விடுதலையை நேசித்த ஒவ்வொரு ஜீவனினதும் ஏக்கங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உள்ளிட்ட ஒவ்வொரு பிரதிநிதியினதும் மனச்சாட்சியை தட்டவில்லையா?

யுத்தம் என்ற பெயரில் எம்மீது நடாத்தப்பட்ட கொடூரத்தாக்குதல்கள் முடிவிற்கு வந்ததன் பின்னர் நாம் அனைவரும் வவுனியா மெனிக்பாம் திறந்தவெளி சிறைச்சாலைக்கு வந்தபொழுது அரசாங்கம் எங்களைப் பார்ப்பதற்கு உங்களுக்கு அனுமதி மறுத்திருந்தது.

எங்களை திறந்தவெளி சிறைச்சாலையில் வைத்திருந்து சனாதிபதித் தேர்தலையும், 2010ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலையும் அரசாங்கம் நடத்தியிருந்தது. அப்பொழுதும் நாங்கள் எங்களின் உயிர்களைத் துச்சம் என நினைத்து நீங்கள் கைகாட்டிய சனாதிபதி வேட்பாளருக்கும், நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கும் வாக்களித்தோம். சம்பந்தன் ஐயா அவர்களே, பொதுத்தேர்தல் முடிந்த பின்னர், மீள்குடியேற்றம் ஆரம்பித்திருந்த வேளையில், அப்பொழுதுதான் மீள்குடியேறியிருந்த எங்களை நீங்களும் உங்களது நாடாளுமன்ற குழுவினரும் எங்களை வந்து எமது இடங்களில் சந்தித்தீர்கள். மீள்குடியேற்றம் என்ற பெயரில் நாங்கள் எப்படி ஒரு வெட்டவெளி காணியிலும் புல்மண்டியிருந்த பற்றைகளிலும் இரவோடு இரவாக இறக்கிவிடப்பட்டிருந்தோம் என்பதை நீங்கள் நேரில் கண்டறிந்தீர்கள்.

இடிந்த பாடசாலை கட்டிடங்களையும், மரங்களின் கிளைகளில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த ஏணைகளையும் கண்டு உங்கள் குழுவினர் கலங்கி நின்றதையும் நாங்கள் அவதானித்தோம். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்கு நேர்ந்த அவலங்களை எடுத்துச் சொன்னதை நீங்களும் குறிப்பெடுத்துக் கொண்டீர்களே நினைவிருக்கா உங்களுக்கு?

ஆண் துணையின்றி கொடுத்த தகரங்களையும், இரும்புக் கம்பிகளையும் கொண்டு தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளை மரக்கிளைகளில் கட்டிய ஏணையில் கிடத்தி பெண்கள் ஒன்று திரண்டு கொட்டில்கள் அமைத்ததைக் கண்ணுற்றபோதும் உங்களது இதயங்கள் வலிக்கவில்லையா?

எவ்வளவு பேர் தங்களது இன்னுறவுகளைக் காணவில்லை என்று உங்களிடம் ஓலமிட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபட்சம் இவ்வளவுபேர் இறந்துள்ளனர் என்றும் இவ்வளவு பெண்கள் கணவனை இழந்துள்ளனர் என்றும் எத்தனைபேர் உங்களிடம் புள்ளி விபரம் வழங்கினர்.

நீங்கள் எடுத்த நடவடிக்கையை வெளிப்படுத்துவீர்களா? எத்தனை பாடசாலை அதிபர்கள் உங்களிடம் இந்தப் பாடசாலையில் குறைந்த பட்சம் இத்தனை மாணவர்கள் இறந்துள்ளனர் என்று முறையிட்டிருப்பர்? அவற்றை நீங்கள் கணக்கெடுத்ததுண்டா?

மக்கள் தெரிவித்த கருத்துக்களையும் வேதனைகளையும் செவிமடுத்து மீண்டும் வந்து ஆவணப்படுத்துவதற்கான தரவுகளைப் பெற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்தீர்களே இன்றுவரை அதனைச் செய்யாததன் காரணமென்ன? இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத்தரப்பினரும், தொல்பொருள் திணைக்களத்தினரும், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களமும், வனப்பாதுகாப்பு திணைக்களமும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையும் கையகப்படுத்திய காணிகளின் மொத்த அளவும் மக்கள் போராட்டத்தின் பின்னர் விடுவிக்கப்பட்ட காணிகளின் அளவும் எஞ்சிய காணிகளின் அளவும் உங்களிடம் இருக்கிறதா?

வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பை நிரந்தரமாகப் பிரித்து, எமது வாழிடங்களிலேயே எம்மை இரண்டாந்தரக் குடிகளாக மாற்றும் நோக்கில் வலிந்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் அரசின் சூழ்ச்சியை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சித்தீர்களா?

உங்களால் புதிதாக அரசியலுக்கு அழைத்துவரப்பட்டவர்களுக்கு எம்மினம் பட்ட துன்பங்களை எடுத்துரைத்து அவர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினீர்களா? எமது விடுதலைப் போராட்டம் பற்றியும் நாம் கடந்துவந்த பாதை பற்றியும் கொஞ்சமாவது அவர்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் நீங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டியிருப்பார்களா?

எமது உறவுகள் தெரிவித்த கருத்துக்களை வைத்து அறிக்கை தயாரித்து இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் கொடுத்திருந்தீர்கள். அதன் தொடர்ச்சியாக நீங்கள் எடுத்த நடவடிக்கைகளை பட்டியலிடுவீர்களா?

கிடைத்தற்கரிய துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி இராஜதந்திர அணுகுமுறையை மேற்கொண்டு எம்மினத்தின் விடுதலையை வென்றெடுப்பீர்கள் என்பதற்காகத்தானே நீங்கள் மூடிமறைத்த விடயங்களையும் திரைமறைவில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் சகித்துக்கொண்டோம்.

உங்களது அணுகுமுறை தற்போது சர்வதேச உதவிகளையும் கேள்விக்குட்படுத்திவிட்டதே. அரசாங்கத்துடன் ஒத்தூதி சகல தென்னிலங்கை ஆளும் வர்க்கத்தினரையும் காப்பாற்றிவிட்டீர்கள். அடுத்தநொடியே உங்களுக்கே பிரதிபலன் கிடைத்தாகிவிட்டது. இப்படியிருக்க எம் விடுதலை வேட்கைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக கருதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பத்தாவது ஆண்டு வருகிறது. உறவுகளை நினைவு கூருவதை யாரும் தடுக்கமுடியாது என்று அறிக்கை விடுவீர்களா? இல்லை அடுத்து தேர்தல்கள் என்பதால் நீங்களே முள்ளிவாய்க்கால் திடலுக்கு நேரில் வருவீர்களா என்று தெரியவில்லை. அது உங்களின் இராசதந்திரம்.

இப்போது வரையில் நாங்கள் நம்பிக்கெட்டவர்களே! உங்களின் வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் பறந்து விட்டன. தீவிரவாதத்தின் பேரால் எமது உரிமைப்போராட்டமே முற்றாக முடங்கும் அபாய நிலையில் இருக்கின்றோம். ஆகவே உங்கள் தலைமையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் எந்தவொரு நபரும் புனிதம் நிறைந்த முள்ளிவாய்க்கால் திடலில் காலடி பதிப்பதை தவிர்ப்பதே சிறந்தது. அரசியலுக்காக நீலிக்கண்ணீர் வடியுங்கள். ஆனால் ஆஃகுதியானவர்களின் நெஞ்சில் ஏறி நின்று உங்கள் நாடகத்தினை அரங்கேற்றாதீர்கள் என்பதே எமது தயவான கோரிக்கை. ஆகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ‘நினைவேந்தல் நிகழ்வு’ என்ற கோட்பாட்டில் நடைபெறுவதற்கு வழிசமைத்து ஒதுங்கிவிடுவதே சாலச்சிறந்தது.

# ஆப்கானிஸ்தான் - தலிபான்களின் கண்ணிவெடியில் சிக்கி 8 குழந்தைகள் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டு வடக்கு பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய பயங்கரவாத குழுக்களின் ஆதிக்கம் சமீபகாலமாக மீண்டும் தலைதூக்க தொடங்கியுள்ளது.

பயங்கரவாதிகள் மீது ஈவிரக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் ராணுவம் மற்றும் போலீசார் ஆகியோரை கொண்ட கூட்டுப்படைகளுக்கு அதிபர் அஷ்ரப் கானி உத்தரவிட்டுள்ளார். இந்த படைகளுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினரும் வான்வழியாக சென்று பயங்கரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள கஸ்னி மாகாணத்துக்குட்பட்ட முக்கெர் மாவட்டத்தில் ராணுவத்தினரை கொல்வதற்காக சாலையோரத்தில் தலிபான் பயங்கரவாதிகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் நேற்று சிக்கிய 8 குழந்தைகள் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். காயமடைந்த மேலும் இரு குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# இலண்டனிலிருந்து இலங்கை சென்ற புதுப்பெண் சாவு - கணவர் திரும்பிச்செல்ல தடை

இங்கிலாந்தில் உள்ள வடமேற்கு லண்டனில் வசித்துவருபவர் கிலான் சந்தாரியா (வயது 33). இந்திய வம்சாவளியை சேர்ந்த இவர் கடந்த மாதம் 19ஆம் திகதி உஷெய்லா பட்டேல் (31) என்பவரை திருமணம் செய்தார். 4 நாட்கள் கழித்து இவர்கள் தேனிலவுக்காக இலங்கை புறப்பட்டு சென்றனர். அங்குள்ள காலி என்ற இடத்தில் ஒரு கடற்கரை விடுதியில் தங்கினார்கள். அப்போது அவர்கள் சாப்பிட்ட உணவு விசமானதாக தெரிகிறது. இதனால் இருவருக்கும் காய்ச்சல் மற்றும் ரத்தவாந்தி ஏற்பட்டது. உடனே அவர்கள் அங்குள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு உஷெய்லா பட்டேல் சிகிச்சை பலனின்றி இறந்தார். பிரேத பரிசோதனை அறிக்கையில், அதிகமாக வாந்தி எடுத்ததால் நீர்சத்து குறைந்து மரணம் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. காவல் துறையினர் இதுதொடர்பாக விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த விசாரணை முடியும் வரை கிலான் சந்தாரியா லண்டன் திரும்ப தடை விதித்துள்ளனர்.



# பெண் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை



ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகர் காபுலின் கிழக்கு பகுதியில் வசித்து வருபவர் மீனா மங்கள் என்ற பெண்மணி. பத்திரிகையாளரான இவர் அந்நாட்டு நாடாளுமன்றத்தின் கலாச்சார ஆலோசகராகவும் இருந்து வந்துள்ளார். மேலும், இவர் உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையில் செய்தி வாசிப்பாளராக இருந்துள்ளார்.

இந்நிலையில், மீனா மங்கள் மர்ம நபர்களால் சுட்டு கொல்லப்பட்டு உள்ளார். தகவலறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். இவரது உடலை கைப்பற்றி, படுகொலை குறித்து விசாரித்து வருகின்றனர்.

இந்த வருட தொடக்கத்தில் ஆப்கானிஸ்தானில் நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்களில் 15 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இவர்களில் 9 பேர் ஒரே நாளில் பலியானதாக அறிக்கை தெரிவித்துள்ளது.

# ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்குமா?

## - போர்க்கப்பல்கள், விமானங்கள், தளபாடங்கள் விரைவு

ஈரான், வல்லரசு நாடுகளுடன் 2015-ம் ஆண்டு அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் என கருதப்பட்ட அந்த ஒப்பந்தம், ஈரான் அணு ஆயுத செயற்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வரவும், அதற்கு ஏற்ப அந்த நாட்டின் மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடைகளை திரும்பப் பெறவும் வழிவகுத்தது.

ஒபாமா காலத்தில் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம், அமெரிக்காவின் தற்போதைய சனாதிபதி டிரம்புக்கு பிடிக்கவில்லை. இதில் அமெரிக்க நலன் கருத்தில் கொள்ளப் படவில்லை என்பது அவரது கருத்து. இதன் காரணமாக கடந்த ஆண்டு திடீரென இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்தார். இது அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தியது. ஈரான் படையை கருப்பு பட்டியலில் அமெரிக்கா சேர்த்தது.

அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகள் ஈரானின் பொருளாதாரத்தை பின்னுக்கு செல்ல வைத்தது. இதுவரை இல்லாத வகையில் ஈரான் நாணய மதிப்பு சரிவை சந்தித்தது. இதனால் வெளிநாட்டு முதலீடுகள் பாதித்தன.

ஈரானை புதிய ஒப்பந்தம் போட வைக்க வேண்டும், அந்த ஒப்பந்தம் அணு ஆயுதங்கள் மட்டுமின்றி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் கட்டுப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று அமெரிக்கா கணக்கு போடுகிறது. ஈரானும் மிரட்டல் விடுத்து வருகிறது. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தியில் தடையை ஏற்படுத்தி விடுவோம் என்கிறது. இது உலகளாவிய எண்ணெய் போக்குவரத்துக்கு பெரும் தடைச்சுவராக அமைந்து விடும். இந்த நிலையில் ஈரான் மீது கண் வைத்து அமெரிக்கா போர்க்கப்பல்களையும், போர் விமானங்களையும், தளபாடங்களையும் நகர்த்துகிறது. பேட்ரியாட் ஏவுகணை அமைப்பை மத்திய கிழக்கு பகுதிக்கு அமெரிக்கா அனுப்புகிறது. ஏற்கனவே இந்தப் பகுதியில் அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் போர்க்கப்பல் தொகுதி உள்ளது. அதில் சேரும் வகையில் யு.எஸ்.எஸ். ஆர்லிங்டன் விமானம் தாங்கி போர்க்கப்பலையும் அனுப்புகிறது.

கத்தார் தளத்துக்கு அமெரிக்காவின் பி-52 ரக போர் விமானங்கள் போய்ச் சேர்ந்து விட்டன. ஈரான் மூலம் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க வீரர்களுக்கு ஆபத்து நேரலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், தளபாடங்களை அனுப்பி வைப்பதாக அமெரிக்கா கூறுகிறது. ஆனால் இதை ஈரான் நிராகரித்து உள்ளது. இது முட்டாள்த்தனமான செயல் என ஈரான் விமர்சித்துள்ளது. ஈராக்கில் மட்டும் அமெரிக்காவின் 5 ஆயிரத்து 200 படை வீரர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கு பகுதிக்கு அமெரிக்கா போர்க்கப்பல்களையும், போர் விமானங்களையும், தளபாடங்களையும் அனுப்பி வைப்பது, அந்த நாடு ஈரானுடன் போர் தொடுப்பதற்கான முன் ஏற்பாடா என்ற கேள்வி சர்வதேச அரசியலில் எழுந்துள்ளது.

# மங்கோலியாவில் விபரீதம் அணிலை சமைக்காமல் சாப்பிட்ட தம்பதி சாவு



கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான மங்கோலியாவில் அணிலை சமைக்காமல் உண்டால் உடலுக்கு பலம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை உள்ளது. இதனால் கிராம பகுதிகளில் உள்ள மக்கள் அணிலை வேட்டையாடி சாப்பிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்த நிலையில், ரஷியா மற்றும் சீனாவின் எல்லையில் அமைந்துள்ள பயான் ஒல்கி மாகாணத்தின் சகானூர் நகரை சேர்ந்த ஒரு தம்பதி கடந்த வாரம் அணில் ஒன்றை பிடித்து, அதன் சிறுநீரகம், வயிற்றுப்பகுதி மற்றும் பித்தப்பை உள்ளிட்ட உடல் உறுப்புகளை சமைக்காமல் அப்படியே சாப்பிட்டனர்.

இதையடுத்து, அவர்களுக்கு வாந்தி, பேதி மற்றும் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். அங்கு மருத்துவ பரிசோதனையில் அவர்களுக்கு பிளேக் நோய் இருப்பது தெரியவந்தது. மருத்துவர்கள் அவர்கள் இருவருக்கும் தீவிர சிகிச்சை அளித்தனர். எனினும் சிகிச்சை பலன் இன்றி கணவன், மனைவி இருவரும் பரிதாபமாக இறந்தனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வயதானவர்களின் மூளையிலும் புதிய நரம்புகள் உற்பத்தியாகும்

முட்டையில் இருந்து கோழி வந்ததா? அல்லது கோழியில் இருந்து முட்டை வந்ததா? என்ற மிகப்பழமையான மற்றும் பிரபலமான ஒரு விவாதத்தைப் போல, நரம்பியல் துறை விஞ்ஞானிகளுக்கு இடையில் நீண்ட காலமாய் ஒரு விவாதம் தொடர்ந்து வருகிறது.

அது என்னவெனில், ஒருவர் பதின்ம பருவத்தை அடைந்தவுடன் நியூரோஜெனசிஸ் (neurogenesis) எனப்படும் நரம்பணு உற்பத்தியானது நின்றுவிடுமா அல்லது தொடருமா? என்பதே.

இப்போது, நடுத்தர வயதைக் கடந்த மக்களின் மூளையும் புதிய நரம்புகள் அல்லது மூளை உயிரணுக்களை உற்பத்தி செய்கின்றன என்று ஒரு புதிய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, புதிய நரம்பு உற்பத்தி என்பது ஒருவரின் வாழ்நாள் முழுக்க தொடரும் என்றும் இந்த புதிய ஆய்வில் முடிவுகள் கூறுகின்றன என்கிறார் நரம்பியலாளர் பால் பிராங்க்லேண்ட்.

மேலும், இந்த நரம்பணு உற்பத்தி அல்லது நியூரோஜெனசிஸ் உதவியுடன் மூளை குறைபாட்டு நோய்களான மனச்சோர்வு மற்றும் அல்சைமர்ஸ் ஆகியவற்றை குணப்படுத்த முடியும் என்றே நீண்டகாலமாய் கருதி வந்துள்ளனர். கடந்த வருடம் பிரபல அறிவியல் வார இதழான நேச்சர் (Nature)இல் வெளியான ஒரு ஆய்வுக்கட்டுரையில், நியூரோஜெனசிஸ் எனும் நரம்பியல் நிகழ்வு ஒருவர் பதின்பருவத்தை அடைந்தவுடனேயே நின்று விடுகிறது என்று தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதற்கு முன்பாகவே, வயதானவர்களின் மூளையில் புதிதாக நரம்புகள் உற்பத்தி ஆகின்றன என்று பல்வேறு வகையான பரிசோதனைகள் மூலமாக நிரூபிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வு உள்ளிட்ட பல நரம்பியல் ஆய்வுகளில் ஒரு முக்கியமான சிக்கல் இருப்பதாக கூறப்படுகிறது. அது என்னவெனில், நரம்பியல் ஆய்வுக்காக பராமரிக்கப்படும் பெரும்பாலான மூளைகள் 'பேரா பார்மால்டிஹைட்' எனப்படும் ஒரு ரசாயனத்தில் மூழ்க வைக்கப்பட்ட நிலையிலேயே பல மாதங்கள் முதல் பல வருடங்கள் வரை பராமரிக்கப்படும். நாளாக நாளாக மூளை மூழ்க வைக்கப்பட்டிருக்கும் பேரா பார்மால்டிஹைட் ரசாயனமானது நரம்புகளை உற்பத்தி செய்யும் மூலக்கூறுகளுக்கு இடையில் இணைப்புகளை ஏற்படுத்தும் என்றும், இறுதியாக நரம்புகளை ஒரு களிம்பு போல மாற்றிவிடும் என்றும் கூறுகிறார் ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்த நரம்பியலாளரான மரியா லோரன்ஸ் மார்ட்டின்.

இதன் காரணமாக, முதிர்ச்சி அடையாத நரம்புகளை அடையாளம் காட்டும் ஒருவகையான புரதமான டபுல்கார்டின் (Doublecortin or (DCX) protein) புரதத்துடன் ஒளிரும் தன்மை கொண்ட



அன்றிவொடி இணைவது பாதிக்கப்படும் என்றும் கூறுகிறார் மரியா.

முக்கியமாக, பேரா பார்மால்டிஹைட் கலக்கப்பட்ட நாற்பத்தி எட்டு மணி நேரத்துக்கு பின்னர் டபுள்கார்டின் நிறைந்துள்ள மூளை உயிரணுக்கள் எண்ணிக்கையில் வெகுவாகக் குறையும் என்றும், அதனால் பேரா பார்மால்டிஹைட் ரசாயனத்தில் மூழ்கடிக்கப்பட்ட மூளைத் திசுவில் புதிய நரம்புகளை கண்டறிவது என்பது முடியாத காரியம் என்றும் கூறுகிறார் மரியா.

இந்த புதிய ஆய்வில், சுமார் 43 முதல் 87 வயதானவர்கள் கொடையாக கொடுத்த சுமார் 13 மூளைகளில் நினைவுகளை உற்பத்தி செய்யும் பகுதியான ஹிப்போகாம்பசில் உள்ள டென்டேட் கைரஸ் எனும் உட்பகுதியில் உள்ள திசுக்களில், டபுல்கார்டின் நிறைந்த ஆயிரக்கணக்கான உயிரணுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதற்குக் காரணம், இந்த 13 மூளைகளும் பேரா பார்மால்டிஹைட் ரசாயனத்தில் வெறும் இருபத்து நான்கு மணிநேரம் மட்டுமே மூழ்க வைக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. மேலும், இந்த 13 மூளைகளில், 43 வயதில் இறந்துபோன ஒருவரின் மூளைத்திசுவில் மட்டும் சுமார் 42 ஆயிரம் முதிர்ச்சி அடையாத நரம்புகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதேசமயம், வயதாக வயதாக நியூரோஜெனசிஸ் அளவு குறைந்து போவதும், அதன் காரணமாக புதிய நரம்புகளின் உற்பத்தி 30 சதவீதம் குறைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேலும், ஆரோக்கியமான மக்களுடன் ஒப்பிடுகையில், அல்சைமர்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் மூளையிலும் முதிர்ச்சி அடையாத உயிரணுக்களின் எண்ணிக்கை 30 சதவீதம் குறைந்துள்ளது என்றும் இந்த புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில், வயதானவர்களின் மூளையிலும் புதிய உயிரணுக்கள் உற்பத்தியாகும் என்று இந்த ஆய்வு தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பச்சை மிளகாயை ஒதுக்காதீர்கள்

நாம் சாதாரணமாக பயன்படுத்தும் பச்சை மிளகாயில் ஏகப்பட்ட நன்மைகள் இருப்பதாக மருத்துவ ஆய்வு ஒன்று பட்டியல் போட்டிருக்கிறது. அதனால் உணவில் காரத்திற்காக மசாலா பொடிகளை சேர்ப்பதற்குப் பதிலாக பச்சை மிளகாயை சேர்த்துக்கொள்ளலாம். பச்சை மிளகாய் காய்ந்து சிவந்து வத்தலாக மாறிவிட்டால், அதில் மருத்துவக் குணங்கள் காணாமல் போய்விடுகிறதாம். அதனால் பச்சை மிளகாயே உணவுக்கும் உடலுக்கும் நல்லது.

பச்சை மிளகாயில் 'ஆன்டி ஆக்சிடன்ட்'கள் என்ற சத்துப்பொருள் மிக அதிக அளவில் உள்ளது. நமது உடலுக்கு பாதுகாவலனாக இது உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அளித்து புற்றுநோயில் இருந்து காப்பாற்றுகிறது. இளமையை நீட்டிக்க வைக்கும் வல்லமையும் இந்த பச்சை மிளகாய்க்கு உண்டு. இதில் வைட்டமின் 'சி' அதிக அளவில் உள்ளது. மிளகாயை பயன்படுத்தும் போது மூக்கடைப்பு சரியாவதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்திருப்போம். இதில் விட்டமின் 'ஈ' சத்தும் அதிக அளவில் இருக்கிறது. இது சருமத்தை பாதுகாக்கவும், எண்ணெய் சுரப்புக்கும் உதவுகிறது. இப்படி



பச்சை மிளகாயால் கிடைக்கும் அனைத்து நன்மைகளும் எந்தவித கலோரிகளும் இல்லாமல் கிடைக்கிறது. அதனால் உடல் எடையை குறைப்பதற்காக உணவுக்கட்டுப்பாட்டில் இருப்பவர்களும் இதனை தாராளமாக உணவில் சேர்த்துக்கொள்ளலாம். ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை சமநிலையில் வைக்கவும் பச்சை மிளகாய் பயன்படுகிறது. இதில் நார்ச்சத்து அதிக அளவில் இருப்பதால் உணவு செரிமானம் வேகமாக நடைபெறுகிறது.

நல்ல காரசாரமான உணவு சாப்பிட்டப்பின் நீங்கள் உற்சாகமாக இருந்தால் அது தற்செயலாக நடந்ததல்ல. அதற்குப்பின் இந்தப் பச்சை மிளகாய் இருக்கிறது. இரும்புச்சத்து குறைபாடு உள்ளவர்களுக்கும் பச்சை மிளகாய் மிக நல்லது. இப்படி ஏகப்பட்ட நன்மைகள் இருக்கிறது. அதே நேரத்தில் பச்சை மிளகாயை அதிகமாக சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் சாப்பிடும்போது நம் கையில் சிக்கும் பச்சை மிளகாய்த் துண்டுகளை கறிவேப்பிலை போல் ஒதுக்கி விடாமல் அதை சாப்பிட்டாலே போதும். கறிவேப்பிலையும் அப்படித்தான், அதிலும் ஏகப்பட்ட மருத்துவ குணங்கள் உள்ளன. அதையும் உணவோடு சேர்த்து சாப்பிடுவது நல்லது.